# கூத்தரங்கம்

KOOTHHARANGAM

விலை ரூ.10

அளிக்கை - 06




கூத்தரங்கம்

ஆரம்பம் - மார்ச்- 2004

ஜனவரி - 2005 அளிக்கை 06

திறந்த மனமொன்று வேண்டும்

**ஆசிரியர் குழு**

தே.தேவானந்த்
அ.விஜயநாதன்
கு.லக்ஷ்மணன்
க.இ.கமலநாதன்

**வடிவமைப்பு:**
தே.பிரேம்

**கணினித் தட்டச்சு:**
ந.கஜித்தா

**ஒளிப்படங்கள்:**
அ.விஜயநாதன்

**நிர்வாகம்:**
பு.றஜனி

**வெளியீடு:**
செயற்திறன் அரங்க இயக்கம்.
Active Theatre Movement

**தொடர்புகளுக்கு:**
**"அருளகம்", ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப் பாணம்**

**தொ.பே.: 0777 286220**
***e.mail : koot04@yahoo.com***

**அலை கடலே...**

# நான் உந்தன் பிள்ளை நீ எந்தன் அன்னை

**ஆ**ழிப்பேரலையின் அவலம் தொடர்பாக அரங்க ஈடுபாட்டார்களின் மனதில் எழுந்த உணர்வுகளுக்கு கவிதை வடிவம் கொடுத்துள்ளார் கவிஞர் நா.சிவசிதம்பரம். இக்கவிதை செயல்திறன் அரங்க இயக்கத் தயாரிப்பில் இசைப் பாடலாகவும் வெளி வந்துள்ளது.

அம்மா இந்நாள் அழகே!
ஆற்றலின் ஊற்றே! உயிரே!
ஏன் வாழ் முதலே வணங்குகிறேன்!

தீ - வெளி - காற்றொடு
திகழ் நிலம் - நீரென
தினமும் மலரும் இயற்கை அம்மா

முற்றத்தில் கோலம் செய்
முழுவான நிலவும் - எம்
சுற்றமும் நீதானே!

கற்றது உன் மடியில்
காலங்கள் உன் அடியில்
முற்றிலும் நீதானே!

வான் பொழி மழையும்
வளர் அலை கடலும்
தாய் தந்தை உறவம்மா

நான் உந்தன் பிள்ளை
நீ எந்தன் அன்னை
வாழ்வுந்தன் வரம் அம்மா

கனவிலும் நினைவு தாருங்கள்
மனதிலும் குளிர்மை வரும் - பாருங்கள்
நீ தருவாய் ! என் வாழ்முதல்
ஆனவளே!

குாலை செவ்வானத்தின்
குதிர் கூடத் தாயே - உன்
கருணையின் வழிதானே!

குால் சுடும் வெயிலொடு
கடுங்கூதல் மழையும் - உன்
கடமையின் தொடர் தானே

பார்வையில் ஒளியும்
பழகும் நல்லுறவும்
நீ தந்த நேசம் அம்மா
வெளிச்சமும் பகலும்
விளக்குடன் இரவும்
வேருக்குள் ஈரம் அம்மா

கனவிலும் நினைவு தாருங்கள்
மனதிலும் குளிர்மை வரும் - பாருங்கள்
நீ தருவாய்! ஏன் வாழ்முதலாளனவளே!

மாறும் - நாள் எந்த நாளும்
ஓயாது - முன்னேற்றம் -
கடலலை போல் உள்ளம்

தீயும் தீபத்தின் ஒளியாகும்
பாரும்!
தாயின் இருவிழி தன்னில்









பூச்சிகள் நாடகம்: 1995 இல் ஒட்டுமொத்த யாழ்ப்பாணமும் இடம்பெயர்ந்ததை எடுத்துக்காட்டும் காட்சி

# முடிந்தும் முடியாதவற்றை பேசிய அரங்கு

**இலக்கியா**


**அ**ரங்கு பேசவேண்டியவற்றைப் பேச வேண்டும். பேச வேண்டியவை மறை பொருளாகக் கிடக்கும், மௌனமாகக் கிடக்கும். அவை புலனுணர்வைத் தட்டும்போதும் அடக்குமுறைகள், அச்ச நிலைமைகளால் பேசாப் பொருட்கள் ஆகிவிடுகின்றன. 1995 இன் பின் ஏற்பட்ட அரசியல், இராணுவ மாறுதல்கள் குடாநாட்டின் அரங்கப் பயணத்தில் மிகுந்த தாக்கம் செலுத்தியிருந்தன. அரங்கு புரட்சிக்கான ஊக்கியெனக் கருதியதாலோ என்னவோ, அதன் மீதான இராணுவப் பார்வை கடுமையானதாகவே இருந்தது. அது இன்றுவரை அரங்கியலாளருக்கான அச்ச நிலைமையை ஏற்படுத்திக் கொண்டேயிருக்கிறது.


எனினும் அவ்வப்போது அரங்கின் வீச்சு வேகங்கொள்வதை இனங்காணக்கூடியதாகவும் உள்ளது. அந்த வகையில் நீண்ட காலங்களின் பின் தே.தேவானந்த்தின் நெறியாள்கையில் உருவான 'பூச்சிகள் அரிக்கும் கண்ணிமைகள்' எனும் நாடகம் பலரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. இங்கே 'நீண்ட காலம்' என்பது தேவானந்த்தின் சமூகப் பார்வையுடன் கூடிய அரசியல் சார்ந்த அரங்கியல் படைப்புக்களைக் கருத்தில் கொண்டதாகவே குறிப்பிடப்படுகின்றது.

'விழிச்சுடர்', 'எல்லாம் சரிவரும்', 'உயிர்விசை', 'அக்கினிப் பெருமூச்சு' என அவரது படைப்புக்களின் வரிசையில் தற்போது 'பூச்சிகள் அரிக்கும் கண்ணிமைகள்' நாடகம் உருவாக்கம் பெற்றிப்பது அவரது தேறிய படைப்புக்களின் வருகையை நிச்சயப்படுத்திக் கொள்கின்றது.

இடையிடையே 'முடக்கம்', 'நெஞ்சுறுத்தும் கானல்' போன்ற இலக்கிய விருது பெற்ற நாடகங்கள் அவரால் படைக்கப்பட்டிருக்கின்றன. எனினும் அவை ஆற்றுகை வடிவத்தில் 'தேறியவை'யாகக் கருத முடியாது. அவை என்.ஜீ.ஓ. தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கில் தயாரிக்கப்பட்டிருந்தன. அதனால், பிரசாரத் தன்மை மேலோங்கியிருந்தது அவற்றில். ஆயினும் அரங்கியற்படிம நுட்பங்களின் பயன்பாட்டால், அதிக பாாவையாளரைச் சென்றடைந்த காரணத்தால் அவையும் தேவானந்தின் அரங்கியற் பயணத்தில் இடம்பிடித்தவையாகவே உள்ளன.

அதேபோன்று தற்போது 'பூச்சிகள் அரிக்கும் கண்ணிமைகள்' நாடகமும் என்.ஜீ.ஓ. தேவைக்காகத் தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அத்தேவையின் பரிமாணம் வேறுபட்டதாக அமைந்து கொள்கின்றமையை நாடகம் தெளிவாக உணர்த்தியுள்ளது. நிதி சேகரித்தல் நடவடிக்கைக்கு உட்பட்டதெனினும் அந்நிதித்











'பூச்சிகள் அரிக்கும் கண்ணிமைகள்' நாடகத்தில் இடம்பெற்ற பல்வேறு காட்சிகளின் ஒளிப்படங்கள்.

தேவையின் நோக்கம் அந்நிதிப் பயன்பாட் டின் தன்மை மற்றும் நாடகம் கூறும் அல்லது உணர்த்தும் உணர்வுகள் என் பன இந்நாடகத்திற்கு பெறுமதி சேர்ப்பன வாகவே உள்ளன.

ஊர் தோறும் திரிந்து, ஓர் நாட்பொழுதுறங்கி, கூட்டாஞ் சோறாக்கியுண்டு உணர்ந்து வந்த செய்திகள் அரங்கிலே அளிக்கை வடிவம் பெற்றிருக்கின்றன. அகதிகள் புனர் வாழ்வு நிறுவனத்தின் பெண்கள் மேம்பாட் டுத் திட்டத்தின் செயற்பாடுகளாக மேற்படி ஊர்த் தரிசிப்புக்கள் நடைபெற்றன. இச் செயற்பாட்டில் கிராமத்து யுவதிகள் தம்மை அர்ப்பணிப்புடன் ஈடுபடுத்தியிருந்தனர். அவர்கள் போரால் பாதிக்கப்பட்டு, இன்ன மும் யுத்தச் சுமைகளைத் தாங்கிவரும் கிராமத்துப் பெண்களிடம் உறைந்து கிடந்த உணர்வுகளைப் பரிமாறிக் கொண் டார்கள். அவர்கள் பெற்ற செய்திகள், உணர்வுகளின் மூலத்திலிருந்து, எம் சமூக பண்பாட்டியல் அம்சங்கள் மற்றும் நம் பிக்கைகளுடன் இணைத்ததாக நாடக உருவாக்கத்தைச் செய்துள்ளார் தேவானந்த். அதற்குக் கவிதை வரிகளைக் கொடுத்தார் கவிஞர் நா.சிவசிதம்பரம். இசை கொடுத் தார் கலைஞர் த.றொபேட். நாடகம் 19.12.2004 அன்று கைலாசபதி கலை யரங்கில் முதல் மேடையேற்றம் கண்டது.

நிகழ்விற்குப் பிரதம விருந்தினராகப் பாரா ளுமன்ற உறுப்பினர் ரவிராஜ், கவிஞர் புதுவை ரத்தினதுரை ஆகியோர் கலந்து கொண்டனர். நாடகம் மேடையேறுவதற்கு முன்பாக உரையாற்றிய புதுவை இரத்தின துரை - சமாதானக் கிழவன் செத்து விட்டான் - என்ற பொருள்படும் கவிதை யைப் படித்தார். (தான் எழுதிய கவிதை யைத் தானே மேடையில் படிப்பது வழமை யில்லை எனக் கவிஞர் குறிப்பிட்டுக் கூறி யுமிருந்தார்.)

உண்மையில் பார்வையாளரின் அனுமதி கோரி அவர் படித்த அந்தக் கவிதை வரி கள் ஊட்டிய உணர்வுகள் நாடகத் திரை விலகலுக்கும் காட்சிப் படிமங்களின் நகர் விற்கும் மேலும் உரமூட்டியிருந்தன. அரங் கின் திரைகள் அகலத்திற்கு அங்கே சிதை வற்ற குடும்பப் படம் சட்டகத்துள் காட்சிப் படுத்தப்பட்டிருந்தது. ரெடி 'சிரியுங்கோ' என்றபடி ஆரம்பித்து காட்சிகள் நகர்ந்தன.

அப்பு ஆச்சி, அப்பா அம்மா, அக்கா தம்பி என வாழ்ந்த குடும்பங்கள் யுத்த மேகங்கள் சூழ்ந்து கொண்டதால், அவற் றிடையே ஏற்பட்ட சிதைவுகளைக் குடும் பப் படங்களின் கதைகளினூடாகக் காட்சி யாக்கப்பட்டிருக்கிறது. அந்த யுத்த சிதை வுகளை, வாழ்க்கைப் பிறழ்வுகளை எவ் வாறு ஒரு குடும்பப்பெண் முகங்கொள் கிறாள் என்பதில் கதைக் கரு தொடர்ந்து மையங்கொள்கிறது.

கடல் வலயப் பாதுகாப்பு நடைமுறையால் வஞ்சிக்கப்படுகின்ற குடாநாட்டு மீனவக் குடும்பங்கள் துகிலுரிந்து கடலுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவதும், தொடர்ந்து அவர்கள் அனுபவிக்கும் சித்திரவதைகளும் கதையின் முன் அசைவுகளாக அமைகின் றன. தொழிலுக்குச் சென்ற குடும்பத் தலை வன் கடலால் திரும்பிவரத் தாமதிக்கின் றான். பின் 'அனுமதிப்போரின்' சித்திரவதை யால் உயிரிழந்துவிடுகின்றான். இங்கே சித்திரவதையின் கொடுமையும், அவனது உயிரிழப்பும் தனி நடிப்பினூடாகக் காட்சி யாகின.

சித்திரவதை செய்பவனை உருக்காட்டாது அல்லது படிமங்கொள்ளாது செய்யப்பட்ட இக்காட்சிப்படுத்தலில் நடிகன் தனது வேத னைகளின் எதிர்வினைகளைக் குறித்த நாடக மோடிக்கு ஏற்ப வெளிப்படுத்தியிருப் பின் அது அழகு பெற்றிருக்கும். ஆனால், வழமையான அடி உதைகளிற்குக் கிடைக் கும் எதிர்விளைவுகளே புலப்படுத்தப்பட் டன. உண்மையில் அந்த அடக்குமுறை யின் வடிவம் புலப்படுமாற்றை குறுக்கி விட்டதென்றே கூறலாம்.

அவன் இறந்து விடுகின்றான். இறந்த உடலை மீட்கச் சென்ற சமூகத்தவர்கள் உடலைக் காவி வரும் வேளையில் நிகழ்ந்த காட்சிக்கு விளக்கம் கொடுப்பது போல் - 'நேரம் பிந்தி வந்ததால அடிச்சுச் சாக் காட்டிப் போட்டாங்கள்' என வசனம் உரைக்கின்றார்கள். இவை தேவையற் றவை. பார்வையாளர்கள் பழகிவிட்டார்கள் - குறியீடுகளைப் புரிந்துகொள்வதற்கும், யுத்த அவலங்களைத் தரிசிப்பதற்கும் - எல்லோரும் வாழ்வது இதற்குள்தான். இவ் வாறு தவிர்க்கப்பட வேண்டியவை, குறைக் கப்பட வேண்டியவை எனச் சில விடயங் கள் கருத்திற்கொள்ளப்பட வேண்டும். அவை நடிகர்களின் திறன் சார்ந்த விட யங்களாகவும் அமைந்து கொள்கின்றன. நடிகர்களின் ஆட்தொகை மட்டுமே அரங் கைச் செழுமையாக்கி விடாது.

அவை ஒருபுறமிருக்க, அரங்கின் பின் பகுதியில் அமைந்த அலைகடலின் இள நீலக் காட்சியமைப்பு பொதுப் பின்னணி யாக அமைய, கடலுக்குச் சென்று உயிர் துறந்தவரின் குடும்பத்தின் அவலம் கதை யாக நகர்கிறது. காட்சிகள் நிஜத்திலும் மனத்தளத்திலும் விமர்சனத் தளத்திலும் எனப் படிமம் பெற்றுள்ளன. பொதுவாகவே கணவனை இழந்த பெண் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், அதற்கான சமூகத்தின் எதிர்வினைகள், அதன் காரணமாக அவ ளது மனத்தில் எழும் உணர்வுக் கொதி நிலைகள் என்பன இந்த யுத்த பூமியின் அன்றாட வாழ்வுடன் பின்னிப் பிணைக்கப் பட்டுள்ளன. கணவனை இழந்த மனைவி உயிர்துறக்க விளைகிறாள். எனினும் பிள்ளைகளிற்காக உயிர்வாழவேண்டும் என்பதில் திடங்கொள்கிறாள். அந்த மன வுறுதியானது அவளது கணவன் கூறுவ தாகக் காட்டப்படுகிறது.

ஆவி நிலையில் அல்லது மனப்பிரமையில் - அவரவர் நம்பிக்கையைப் பொறுத்தது - அவள் முன் ஒரு காட்சி தென்படுகிறது. அதாவது அவன் இறந்த நாற்பத்தெட்டாம் நாள் அவனது குருதி கலந்த கடலில் மூன்றுமுறை மூழ்கி எழுந்தால் அவள் துணிவு பெறுவதற்கு வழிகிடைக்கும் என்று அது கூறுகிறது. ஆனால், யுத்தம், இடப்பெயர்வுகள், கடல் வலயத் தடைச் சட்டங்கள் என்பன நாற்பத்தெட்டு நாட் களைப் பல வருடங்கள் ஆக்கி விடுகின் றன. அவள் இந்தப் பல வருடங்கள் அனுபவித்த இன்னல்கள் எண்ணிலடங்கா தவை. அவளது எதிர்பார்ப்பெல்லாம் 3 முறை கடலில் மூழ்கி எழுவது, இந்தச் சமூகம் அவளுக்குக் கொடுத்த வேதனை கள், நெறியாளரின் சமூகம் பற்றிய விமர் சிப்புடன் காட்சியாகியுள்ளன. அக்காட்சிப் படிமங்கள் வாதப் பிரதிவாதங்களிற்கும் சமூகம் சார்ந்த சிந்தனைக் கோட்பாடுகளிற் கும் மீள் வாசிப்புக் களத்தை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

காலம் கனிந்து வரும் வேளை அல்லது கடல் செல்லும் வேளை வர அவள் கடல் சென்று மூன்று முறை மூழ்கி எழுகின்றாள். அதன் விளைவாகப் பல 'மனப்புயங்கள்' உயர்ந்த நிலையில் குடும்பப் படச்சட்ட கத்துள் காட்சியளிக்கிறாள். இது நாடக முடிவு.

உண்மையில் மன அல்லது மத, சடங் காசார நம்பிக்கைகள் தொடர்பான கருத்தி யல் அக முரண்பாடுகள் எழுந்து கொண்டே யிருக்கின்றன. முரண்பாடுகளின் களம் - அரங்கு, வாழ்க்கை, சமூகம், தனிநபர் வாழ்க்கை, சித்தாத்தங்கள், நம்பிக்கைகள் என ஏற்றும் நிராகரித்தும் நாடகத்தில் கருத்துக்கள் வெளிப்படுத்துதல் ஆற்று கையின் ஒட்டுமொத்த விளைவில் தாக்கத் தையே ஏற்படுத்தியிருக்கின்றன. அவை, எமது சமூகம் சாராத மூன்றாம் சக்திகளின் நிராகரிப்பாக அமைந்து கொள்கின்றன. எமது பாரம்பரிய பண்பாட்டியல் அம்சங் களின் அடித்தளத்தில் இருந்து கட்டி யெழுப்பப்படாத நிகழ்ச்சித் திட்டங்கள் நிராகரிக்கப்பட வேண்டியவை. அவை வெற்றியளிக்கப் போவதுமில்லை.

பொதுவாகவே நாடகக் காட்சிகள் அரங்க நுட்பம் சார்ந்தவையாகவும், காட்சிப்படி மங்கள் நடிகர்களினூடாக உருப்பெற்ற வையாகவும் அமைந்திருந்தன. ஆழ்மன

*(பார்க்க பக்கம் 15)*

## வவுனியா அரங்காலயா பண்பாட்டுக் குழுவின்

# விடியலின் விம்பங்கள்

சமாதானம் நின்று நிலைக்கவேண்டும் என்பதற்காகப் பல தரப்பினரும் பல்வேறு வழிகளில் முயற்சியெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். சமாதானத்தில் ஏற்படுகின்ற சிறு சீறலைக் கண்டு 'எல்லாம் உடைந்து விடும்' எனும் அச்சத்தில் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

எம்மை அடக்கி ஒடுக்கி ஆள நினைக்கிற அதிகார சக்திகளிற்கு எதிராகப் போராடும் நாம், எமக்குள்ளேயே நிலவும் சின்னச் சின்னப் பிரச்சினைகள், குரோதங்கள், துவேசங்கள், மனக்கசப்புக்களைக் களைந்தெறிந்துவிட்டு 'மன இருள்' அகற்றி அணி திரள்வோம் என வேண்டுதல் செய்தவாறு வவுனியா அரங்காலயா பண்பாட்டுக் குழுவினர் குடாநாட்டிற்கு 19.12.2004 அன்று வருகை தந்தனர்.

'விடியலின் விம்பங்கள்' எனும் தெருவெளி அரங்காற்றுகையை நல்லூர் நாவலர் கலாசார மண்டப முன்றலில் நிகழ்த்தினார்கள். அரங்க ஆற்றுகைக்கு முன்னராக 'சமாதானத்தைத் தேடி' எனும் பொதுக் கூட்டமும் வவுனியா விழுது நிறுவன தவிசாளர் சாந்தினி சச்சிதானந்தம் அவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் கலாநிதி லக்ஷ்மன் மாரசிங்க (சிறிலங்கா சமாதானச் செயலகம், அரசியல் யாப்புக் குழுத் தலைவர்), கலாநிதி ரஞ்சித் அமரசிங்க (அரசியல் துறைத் தலைவர், பேராதனைப் பல்கலைக்கழகம்) ஆகியோர் கருத்துரை வழங்கினர். இந்த 'சமாதானத்தைத் தேடி' என்ற நிகழ்வின் ஒரு பகுதியாகவே 'விடியலின் விம்பங்கள்' ஆற்றுகையும் இடம் பெற்றது. பிறமாவட்டங்களில் 'ஒதுக்காதி ஒதுக்கன்' என்ற பெயரிலேயே இந்த அரசியல் முரண்நிலைகளை ஆராயும் வீதி இசை நாடகம் நிகழ்த்தப்பட்டிருக்கிறது.

இவ்வாற்றுகை தமிழக நாடகக் கலைஞர் பிரளயன் அவர்களின் அண்மைக்கால இலங்கை விஜயத்தின் போது அவரிடம் பயிற்சி பெற்றவர்களால் தயாரிக்கப்பட்டிருக்கிறது. விழுது, கிராம அபிவிருத்தி நிறுவனம், பெண்கள் அபிவிருத்தி நிலையம், திருகோணமலை மாவட்ட இளைஞர் அபிவிருத்தி அகத்தின் விடியல் அரங்கக் குழு, உழைக்கும் பெண்கள் அமைப்பு ஆகிய நிறுவனங்களைச் சேர்ந்தோர் ஆற்றுகையில் பங்கெடுத்தார்கள்.

வடமோடி, தென்மோடிக் கூத்துக்களின் பாடலமைப்புக்களை வைத்துப் புனையப்பட்ட பாடல்களுடன் வீதி நாடகத்திற்குரிய வெளிப்பயன்பாட்டில் இவ்வாற்றுகை நடைபெற்றது. 'ஒக்கன்' எனும் குறித்த பாத்திரம் மக்களின் ஒற்றுமை மத்தியில் ஏற்படுகின்ற சிறு சிறு பிரச்சினைகளை ஊதிப்பெருப்பிக்க விளைகின்றான். ஆயினும், அதனை இனங்கண்ட மக்கள் அவனை விரட்டியடிக்கிறார்கள். இங்கே பிரதானமாக இலங்கையில் இரு சமூகத்தவரும் இனமத வேறுபாடின்றி ஒற்றுமையாக இருக்கும் நிலமையை முன்நிறுத்தி கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. 'தமிழ் பேசும்' மக்களாகிய நாம் ஐக்கியப்பட்ட ஒன்றுபட்ட சக்தியாகத் திரண்டு நின்று உரிமைக்குரல் கொடுப்போம் என ஆற்றுகையாளர்கள் வேண்டிக்கொள்கிறார்கள்.

ஆற்றுகை பாடல் லயம், சந்தம் காரணமாக இனிமை கொண்டிருப்பினும் வீதி நாடகத்திற்குரிய எந்த அடிப்படை மூலங்களையும் கொண்டிருக்கவில்லை. வீதியில் போடப்படுவது எல்லாம் வீதி நாடகமாகி விட முடியாது. சில நடிகர்கள் தமது தனித்துவ முயற்சியில் நாடகத்தை நகர்த்திச் சென்றார்கள். ஆயினும், ஒட்டு மொத்தமாக வீதி நாடக விடயங்கள் பற்றி அவர்கள் கவனம் செலுத்தவேண்டும். பார்வையாளரின் இதயத்துடன் பேசமுற்படும்போது அதற்கேற்ற பக்குவம் பெற வேண்டும். ஆற்றுகையாளர்கள் மல்லுக் கட்டுவோராக மாறிவிடக்கூடாது. வாதப் பிரதிவாதங்கள் எழும். தீர்க்கமான கருத்தியற் சிந்தனையிருப்பின் பார்வையாளர்கள் பந்தாட நினைக்க மாட்டார்கள்.

அன்று அந்த ஆற்றுகையின் இறுதியில் கலந்துரையாடலும் எதிர்பார்க்கப்பட்டது. அது காரசாரமாக இருந்திருப்பின் வரவேற்கத்தக்கது. ஆனால், விதண்டா வாதங்களாகவும் ஆற்றுகையாளர்களை சிறுமைப்படுத்தியதாகவுமே இருந்தது. உண்மையில் இக் கலந்துரையாடலில் ஏற்பட்ட நிலைமையானது நாடகத்திற்கு முன்னர் நடைபெற்ற சமாதானம் பற்றிய பொதுக் கூட்டத்தின் பிரதி பலனே எனலாம். மக்கள் எப்போதும் விழிப்புடன்தான் இருக்கிறார்கள். இதனை யாரும் மறந்து விடக் கூடாது.

அரங்கின் மீது பற்றுக் கொண்டவர்கள் ஏன் அளிக்கை செய்கிறோம், யாருக்கு கருத்துக்கூறுகிறோம், என்ன கருத்துக் கூறுகிறோம், என்ன கருத்தைப் புரிந்து கொண்டோம், என்ன கலந்துரையாடுகின்றோம் போன்ற விடயங்களில் கவனம் கொள்ளுதல் சிறந்தது. அரங்கத் துறையில் கற்பதற்கு நிறையவே உண்டு. அதுவும் பட்டறிவால் பெற்றுக்கொள்ள மிக அதிகமாகவே உண்டு.

# தமிழ் இலக்கிய விழா

வடக்கு - கிழக்கு மாகாண கல்விப் பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத் துறை இளைஞர் விவகார அமைச்சு நடத்திய தமிழ் இலக்கியப் பெருவிழா கடந்த ஒக்ரோபர் மாதம் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடந்தது. முத்தமிழுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நாடகத்துறை சார்ந்த நிகழ்வுகளும் துறை சார்ந்தோருக்கு விருது வழங்கிக் கௌரவிக்கும் நிழகழ்வுகளும் இடம்பெற்றன.

மூன்று நாட்கள் நடைபெற்ற இந்த விழாவில் முதல் நாளில் முள்ளியவளை தமிழ் வித்தியாலய மாணவர்கள் வழங்கிய 'பண்டாரவன்னியன்' நாட்டுக் கூத்தும் யாழ். திருமறைக் கலாமன்றம் வழங்கிய சத்திய வேள்வி இசை நாடகமும் நிகழ்த்தப்பட்டன.

இரண்டாம் நாள் கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை மாணவர்களும் கன்னங்குடா மரபு வழிக் கூத்தக் கலைஞர்களும் இணைந்து கூத்து லயம் எனும் ஈழத்தமிழ்க் கூத்துக்களின் ஆடல், பாடல், லயம், மோடி தொடர்பான விளக்கவுரை ஆற்றுகையைச் செய்து காட்டினர். அத்தோடு வயாவிளான் ம.ம.வி. மாணவர்களின் 'குருபக்தி' தாளலயக் கதையும் வட்டுக்கோட்டை நாட்டுக் கூத்து அபிவிருத்திக் குழுவினரின் வடமோடிக் கூத்தும் இடம்பெற்றன.

மூன்றாம் நாள் - கலாநிதி நடிகமணி வி.வி.வைரமுத்து அரங்கில் - பாரம்பரிய மேம்பாட்டுக் கழகம் வழங்கிய நாடக மேடைப்பாடல்களும் இடம்பெற்றன. நாடக இலக்கியத்திற்கான சிறப்பு விருதுகள் தே.தேவானந்தின் - நெஞ்சுறுத்தும் கானல்' எனும் நாடக நூலுக்கும் அருணா செல்லத்துரையின் 'பண்டார வன்னியன் குருவிச்சி நாச்சியார்' நூலுக்கும் ஞா.ஜெயரஞ்சினியின் 'ஈழத்து அரங்கில் பெண்' என்ற நூலுக்கும் வழங்கப்பட்டன. அத்தோடு, ஈழத் தமிழ் நாடக உலகின் தாய் குழந்தை ம.சண்முகலிங்கம் ஆளுநர் விருத்திற்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். எனினும் அவர் அந்த விருதை ஏற்றுகவில்லை.

# இந்திய அரங்கின் சமகாலப் போக்குகள்

## - ஓர் அனுபவப் பகிர்வு

செ.சுந்தரேஸ்

இந்தியச் சமூகம் பற்றிய புரிதல் என்பது மிகவும் கடினமான விடயமாகும். அது தன்னகத்தே பல இனங்களினையும் மதங்களினையும் பண்பாடு, கலாசாரம், சாதித்துவ அடையாளங்களினையும் அரசியல் நிலைப்பாடுகளினையும் கொண்டது. இவற்றுக்கிடையே பல ஒன்றிணைந்த பண்பினையும் வேறுபட்ட அம்சங்களினையும் கொண்டிருப்பதன் பயனாகவே இந்திய சமூகம் பற்றிய புரிதல் கடினமாகப்படுகின்றது.

இத்தகைய பின்னணிகளின் அடிப்படையிலேயே இந்திய சமூகம் பற்றியும், அவர்தம் கலைச் செயற்பாடுகளினையும் புரிந்து கொள்ள முற்படுதல் வேண்டும். பொதுவாக இந்திய அரங்கின் பாரம்பரியங்களினை அடிப்படையாகக் கொண்டு அவற்றை,

1. மார்க்க மரபு

2. தேசி மரபு என இரண்டாக வகைப் படுத்திக் கொள்வார்கள்.

மார்க்க மரபென்பது நாட்டிய சாஸ்திரத்தின் நியமங்களினை அடிப்படையாகக் கொண்ட அரங்காகும். இந்த அரங்கினை இந்தியா முழுமைக்கும் பொதுமையான அரங்காகக் குறிப்பிட்டுக் கொள்வார்கள். எனினும் அதனை இந்தியா முழுமைக்கும் பொதுவான ஒன்றாகக் கூறமுடிமா என்பது இன்றைய நிலைப்பாடுகளில் கேள்விக்கு உட்படுத்த வேண்டிய ஒரு விடயமாக உள்ளது.

தேசிமரபென்பது இந்தியாவின் பிரதேச அரங்க மரபாகக் குறிப்பிடப்படுகின்றது. இந்த அரங்குகளே இந்தியாவின் வெவ்வேறு பிரதேசங்களினைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அரங்க வடிவங்களாகும். ஆனால், இவற்றுக்குள் நாட்டிய சாஸ்திர அரங்கின் பல பண்புகளினையும் தரிசிக்க முடிகின்றது.

மார்க்க அரங்க மரபானது பிரதேச அரங்க மரபுகளின் பண்புகளினைக் கொண்டே கட்டியெழுப்பப்பட்டிருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால், இன்று இவ்விரண்டு அரங்குகளுக்கும் இடையிலான கொண்டு கொடுத்தல்கள் மூலமே மரபு சார் அரங்குகளின் இருப்பும் அவற்றை இன்னொரு தளத்திற்கு எடுத்துச் செல்லுதலுக்குமான முயற்சிகளும் இடம்பெறுகின்றன.

இத்தகைய மரபு சார் அரங்குகளில் இந்து மதத்தின் செல்வாக்கு மிகவும் ஊன்றிக் காணப்படுகின்றன. ஒரு வகையில் அவற்றைப் பிரித்தெடுத்தல் என்பது அவற்றின் ஆன்மாவைச் சிதைத்தலுடன் தொடர்புடையதாகிவிடும்.

### தேசி மரபு (பிரதேச அரங்க மரபு) நாடகங்களின் இன்றைய நிலை

பிரதேச அரங்க மரபுகளாக கேரளத்தின் கதகளி, கூடியாட்டம் தமிழகத்தின் கதகளி, தெருக்கூத்து, பாகவதமேளா, ஆந்திராவின் வீதி நாடகம் போன்றவற்றையும் வடக்கில் கதக், சௌ, நௌதங்கி, ரஸ்லீலா, ராம்லீலா போன்ற பல்வேறு அரங்குகளினையும் கூறலாம்.

இந்த அரங்க நடவடிக்கைகள் பெரும்பாலும் இன்றும் சடங்கு சார் நிகழ்வுகளுடன் பின்னிப் பிணைந்திருப்பதால் அவற்றின் பயில்முறை வலிமையாகக் காணப் படுகின்றது. இந்த அரங்குகள் ஒரு வகையில் அவ்வப்பிரதேசங்களின் அடையாளங்களினைப் பேணுவதாகவும் விளங்குகின்றன.

தமக்கான பல்வேறு அடிப்படை நியமங்களைக் கொண்ட பிரதேச அரங்க மரபுகளில் இன்று பல்வேறு மாற்றங்களினைச் செய்ய முற்படுகின்ற நடவடிக்கைகளினைக் காணமுடிகின்றது. உதாரணமாகக் குறிப்பிடின் அம்பலக் கலைகளாகவும், குலமரபுக் கலைகளாகவும் விளங்குகின்ற கூடியாட்டம், கதகளி, தெருக்கூத்து போன்ற பல்வேறு வடிவங்கள் அவற்றின் தளத்தில் இருந்து விலகி சமகாலப் பிரச்சினைகளினையும் மத்திய தரவர்க்க மக்களுடைய பிரச்சினைகளையும் பேச முயல்கின்றன. எனினும், அவ்வரங்குகளுக்குள் உள்ள இறுக்கமான நியமங்கள் அவற்றின் வேகமான வீச்சுக்குத் தடையாக விளங்குகின்றன. நெகிழ்வுசார் அரங்குகளில் இவற்றின் பாய்ச்சல் வேகமாக உள்ளது. இதற்கு உதாரணமாக தமிழகத்தின் தெருக்கூத்தினைக் குறிப்பிட முடியும். இச்செயற்பாடுகள் அழகியல் ரீதியாக புதிய மாற்றங்களினையும் உள்வாங்கிக் கொள்கின்றன.

குல மரபுக்குள் இவ்வாற்றுகைகள் பேணப்படுவதால் அவற்றின் ஆன்மா பேணப்படுகின்றபோதும் அவர்களது சமூக வாழ்வு நிலை காரணமாக பெரும்பாலான கலைஞர்கள் அவற்றைத் தமது அடுத்த சந்ததியினருக்குக் கையளிக்கத் தயங்குகின்றனர். இதனால், இந்த மரபு சார் அரங்குகளின் எதிர்கால நிலை என்பதும் கேள்விக்குள்ளாகின்றன. எனினும், இவை பற்றிய சிந்தனை அரங்கவியலாளர்களிடையே காணப்படுவதால் மாற்றுவழி காண்பதற்கான சாத்தியப்பாடுகள் உண்டு.

சில அரங்கவியலாளர்கள் அழிந்து போகின்ற அரங்க மரபுகளினை மீளவும் கட்டியெழுப்புகின்ற நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். உதாரணமாகக் குறிப்பிடின் பாகவதமேளா சார்ந்த கைகிசி வடிவத்தினைப் பேராசிரியர் இராமானுஜம் அவர்கள் அத்துறை சார்ந்த கலைஞர்களுடனும் இணைந்து பயில் நிலைக்குக் கொண்டுவர முயற்சிக்கின்றார். இச்செயற்பாடு சார்ந்த பல விமர்சனங்கள் உள்ள போதும் அது ஆக்கபூர்வமான நடவடிக்கையாக விளங்குகின்றது.

மரபு சார்ந்த இன்றைய அரங்குகள் செந்நெறியும் நாட்டார் வடிவமும் சார்ந்த (Semi cassical) தன்மையைக் கொண்டிருக்கின்றன. எனினும், முற்றுமுழுக்க நாட்டார் வடிவம் சார்ந்த பல அரங்க நடவடிக்கைகள் இன்றும் பயில்முறையில் உள்ளன. அவற்றுக்குள்ளேயே இந்திய ஆத்மாவின் செறிவு பலமானதாக உள்ளது. உதாரணமாகக் குறிப்பிடின் கரகம், காவடி, தப்பாட்டம், தேவராட்டம், ஒயிலாட்டம், கணியான் ஆட்டம் போன்ற ஆட்ட வகைகளும் வேறும் பல பிரதேச நடனங்களும், இணைக் கருவிகளுடனான ஆட்டங்களும் இத்தன்மையுடன் விளங்குகின்றன.

துரதிஷ்டவசமாக இத்தகைய ஆற்றுகைகள் பல அவர்களுடைய சாதித்துவ அடையாளங்களைப் பேணுவதால் அவற்றைப் பலர் சாகவிடுகின்ற நிலைமைகளும் உண்டு.

### நவீன அரங்க முயற்சிகள்

நவீன அரங்க முயற்சிகள் ஆரம்பக் கட்டங்களில் மேற்கு வங்காளம், மும்பாய் ஆகிய பிரதேசங்களினூடாக அறிமுகமானபோதும் இன்று இந்தியா முழுவதும் பல்கிப்பெருகியுள்ளன. பல்வேறு எண்ணக் கருக்களின் அடிப்படையில் அரங்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சிலர் குறிப்பிட்ட எண்ணக் கருக்களுக்குள் நின்று வேலை செய்கின்ற போதும் பல அரங்கவியலாளர்கள் பல்வேறு எண்ணக் கருக்களை அடிப்படையாகக் கொண்டு தனித்தும் குழுக்களாகவும் இணைந்தும் செயலாற்றும் ஆரோக்கியமான நிலை

அங்கு தென்படுகின்றது. நவீன அரங்க முயற்சிகளின் பிரதான ஓட்டம் பல்கலைக் கழகங்களாலும் தனிப்பட்ட நபர்களாலும் அரங்கக் குழுக்களாலும் பாடசாலைகளாலும் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. இத்தடத்தில் தேசிய நாடகப் பள்ளியின் (புதுடில்லி) பங்களிப்பு அளப்பெரிதாகும்.

## தேசிய நாடகப் பள்ளி

தேசிய நாடகப் பள்ளியானது தனக்கான மாணவர்களைப் பல்வேறு மாநிலங்களிலும் இருந்து பெற்றுக்கொள்கின்றது. இதற்கான நுழைவு என்பது மிகக் கடினமாக உள்ளது. அது மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்களினை உள்வாங்கி அவர்களினை அரங்கின் குறிப்பிட்டதுறை சார்ந்து சிறப்புத் தேர்ச்சி அடிப்படையில் பயிற்சியளிக்கின்றது. இன்றைய நிலையில் இப்பள்ளியில் இருந்து வெளியேறிய மாணவர்களே பிரதான அரங்க ஓட்டத்திற்குப் பெரும் பங்காற்றுகின்றனர். இன்று இந்தியாவில் சிறந்து விளங்குகின்ற பல அரங்க நெறியாளர்களும் நடிகர்களும் அரங்க விதானிப்பாளர்களும் இப்பள்ளியைச் சார்ந்தவர்கள்.

தேசிய நாடகப் பள்ளி நாட்டைப் பல வலயங்களாகப் பிரித்து தமது ஆளணிகளையும் பிரதேசம் சார்ந்த ஆளணிகளையும் கொண்டு பல்வேறு களப்பயிற்சிகளினையும் கருத்தரங்குகளையும் நாடக ஆற்றுகைகளினையும் மேற்கொள்கின்றது.

இது ஆண்டு தோறும் 'பாரத்ரங்க மகோற்சவ' எனும் பெயரில் தேசிய நாடக விழாவினை ஒழுங்கு செய்கின்றது. இவ்விழாவில் பல்வேறு நாடுகளில் இருந்து அழைக்கப்பட்ட நாடகங்களும், பல்வேறு மாநிலங்களில் இருந்து வரவழைக்கப்பட்ட நாடகங்களும் எனக் கிட்டத்தட்ட நூறு நாடகங்களுக்கு மேல் மேடையேற்றப்படுகின்றன.

இவ்விழாவில் பல்வேறு புதிய நாடக இயக்குனர்களுக்கும் புதிய குழுக்களுக்கும் வாய்ப்பளிக்கப்படுகின்றது. இவ்வாறு, தெரிவு செய்யப்பட்டவர்கள் அதனைத் தமக்கான அங்கீகாரமாகக் கருதுகின்றனர்.

## நாடக விழாக்கள்

தேசிய நாடகப் பள்ளி தவிர பல்வேறு நாடகக் குழுக்கள் தேசிய அளவில் நாடக விழாக்களினை நடாத்துகின்றன. நந்திகர் நாடக விழா, ரங்கயானா நாடக விழா, பூனே நாடக விழா என்பன இந்த வகையில் குறிப்பிடத்தக்கன. இது தவிர சில குழுக்கள் தமது மாநிலங்களுக்குள்ளும் தமது பிரதேசங்களுக்குள்ளும் இருந்து பல்வேறு குழுக்களை அழைத்துத் தாமும் நாடக விழாக்களினை நடாத்துகின்றன.

## குழுசார் நடவடிக்கைகள்

இந்தியா சார்ந்து பல ஆயிரக்கணக்கான குழுக்கள் உள்ளபோதும் சில குழுக்களே தொடர்ந்து தமது அரங்கச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றன. இக்குழுக்கள் பல தமக்கான கோட்பாடுகளினை அடிப்படையாகக் கொண்டு இயங்குகின்றன. உதாரணமாகக் குறிப்பிடின் தமிழ்நாட்டில் தலித்தியம் சார்ந்து கே.அ.குணசேகரன் (தன்னானோ), கூட்டுக்குரல் ஒத்திகை போன்ற குழுக்களும் கூத்துக்களை அடிப்படையாகக் கொண்டு கூத்துப்பட்டறையும் (இன்று பல்வேறு ஆற்றுகைகளில் ஈடுபடுகின்றபோதும் ஆரம்பிக்கப்பட்ட காலங்களில் கூத்தினைப் பரவலாக்கம் செய்யும் நோக்கத்துடனேயே நா.முத்துசாமியால் ஆரம்பிக்கப்பட்டது) சிறுவர் அரங்கு சார்ந்து வேலு சரவணனுடைய ஆழியும், பெண்ணியம் சார்ந்து ஜீவா, மங்கை, பிரசன்னா, பிரசன்னாசாமி போன்றோரது குழுக்களும் சோதனை முயற்சி சார்ந்து தலைக்கோலி, அரங்கம், நிஜ நாடக இயக்கம், களம் மஜிக் லன்ரன் பேன்ற குழுக்களும் தெருவெளி அரங்கு சார்ந்து பரிக்தெரு, சென்னை கலைக் கழகம் போன்ற குழுக்களும் மண்ணின் மரபு கொண்டு மணல் மகுடி (முருகபூபதி) போன்ற குழுக்களும் ஆற்றுகையில் ஈடுபடுகின்றன. இவை தவிர சபா நாடகங்கள் எஸ்.வி.சேகர் போன்றவர்களால் ஆற்றுகை செய்யப்படுகின்றன.

பல குழுக்கள் தமக்கான வசதிகளை அடிப்படையாகக் கொண்டு தமது நாட்டிலும் வெளிநாடுகளுக்குச் சென்றும் ஆற்றுகையில் ஈடுபடுகின்றன.

## சமூக முன்னெடுப்புப் பணிகள்

பல அரங்கவியலாளர்கள் சமூகமுன்னெடுப்பு அக்கறை கொண்டு செயலாற்றுகின்றனர். இவர்கள் தலித்தியம், பெண்ணியம், அரசியல், தேசிய ஒருமைப்பாடு, சிறுவர் பராமரிப்பு, இன ஒடுக்குமுறை சார்ந்த பல்வேறு பிரச்சினைகளினை பாதிக்கப்பட்டவர்களுடன் இணைந்து சமூக விடுதலைக்காகப் போராடுகின்றனர்.

இவை தவிர சிறைக் கைதிகளினையும் பாலியல் தொழிலில் ஈடுபடுகின்றவர்களினையும் அலிகளினையும் கொண்டு அவர்தம் பிரச்சினையைப் போதிக்கின்றனர்.

## நிதி மூலங்கள்

தனிப்பட்ட நபர்களது அரங்க முயற்சிக்கும் குழுக்களது அரங்க முயற்சிகளுக்கும் மத்திய மாநில அரசும் பல்வேறு வெளிநாட்டு உள்நாட்டு நிறுவனங்களும் தனிப்பட்ட நபர்களும் ஒத்துழைப்பு வழங்குகின்றனர். நாடகச் சீட்டு விற்பனை மூலமும் ஆற்றுகைக்கான பணம் திரட்டப்படுகின்றது. சில இடங்களில் நாடகம் தொழில முறை சார்ந்து இயங்குகின்றது.

## நாடகங்களுக்கான கதைக் கருக்கள்

நாடகங்களுக்கான கதைக் கருக்கள் பெரும்பாலும் சமூகப் பிரச்சினைகளில் இருந்தும் சிறுகதை, நாவல், கிராமியக் கதைகள், சடங்கு நம்பிக்கைகள், மொழி பெயர்ப்பு, தழுவல்கள் என்பவற்றில் இருந்தும் பெறப்படுகின்றன. இன்றும் புராணங்கள், மகாபாரதம், இராமாயணம் போன்றவற்றில் இருந்து கருவைத் தெரிவு செய்தல் இடம்பெறுகின்றது. அவற்றை அவ்வாறே பேசுதலும், புதிய வியாக்கியானங்களுக்கு உட்படுத்துதலும் நடைபெறுகின்றது.

பல மொழி பெயர்ப்பு நாடகங்களை (சேக்ஸ்பியர், மேலியர், ஈஸ்கலஸ், சோப்போகிளிஸ் போன்றோரது) தமது பண்பாட்டுக்குள் உள்வாங்கி அவர்களுடையதாக்கி ஆற்றுகை செய்யும் மரபினையும் காணலாம்.

## தேசிய நாடகம்

தேசிய நாடகம் பற்றிய கலந்துரையாடல் அவர்களிடையே காத்திரமானதாகக் காணவில்லை. சிலர் அதனைச் சாத்தியமற்றதாகக் கருதுவது உண்மையும்கூட. ஏனெனில் குறிப்பிட்ட ஒரு மாநிலத்திற்குள்ளேயே பல மொழி, இனம், பண்பாடு, நம்பிக்கைகள், அடையாளங்கள் கலந்துள்ளன. இதனால் ஒரு மாநிலத்திற்கான அல்லது மக்கட்கூட்டத்திற்கான ஒரு வடிவத்தைக் கண்டறிதலே கடினமான செயலாக இருக்கும் போது பரந்த இந்தியா முழுமைக்குமான ஒரு வடிவத்தைக் கட்டியெழுப்புதல் என்பது வலிந்த செயற்பாடாகவும் ஆன்ம சிதைவுமாகவே இருக்கும்.

இதற்குப் பதிலீடாக பலமொழி இணைந்த நடாக வடிவங்களை கட்டியெழுப்ப முனைகின்றனர். இது புரிதல் நோக்கத்துடன் செய்யப்படுகின்றதா அல்லது தேசிய நாடக நோக்கத்துடன் செய்யப்படுகின்றதா என்பது கேள்வியே.

## நாடகவியலாளர்களுக்கும் சினிமாக்காரருக்குமான கொண்டுகொடுத்தல்உறவு

தமிழ்நாட்டைத் தவிர ஏனைய பல மாநிலங்களில் நாடகக்காரருக்கான பலமான அங்கீகாரம் உண்டு. பல சினிமா நடிகர்கள் நாடகத்தில் நடிப்பதனையே தமக்கான அங்கீகாரமாகக் கருதுகின்றனர். அரங்க நடவடிக்கையில் ஈடுபடும் பலரைச் சினிமாவுக்குள் உள்வாங்குகின்ற நிலை இன்று தமிழ்நாட்டிலும் வலுவடைந்து வருகின்றது. நாசர், மம்முட்டி, பசுபதி, தோட்டாதரணி, கிருஷ்கனாட், சபா

*(பார்க்க பக்கம் 10)*



# ஈழத்தில் கர்நாடக இசையை பிரசவித்த இசை நாடகம்

ஈழத் தமிழர்கள் பெரும்பாலும் தமிழக மக்களின் கலை கலாசாரம் பண்பாடுகளுடன் ஒத்த வாழ்க்கை முறையில் வாழ்பவர்களாயினும், தமிழகத்தில் தோன்றி பெரு விருட்சமாக வியாபித்து நிற்கும் கர்நாடக இசையானது கிட்டத்தட்ட அரை நூற்றாண்டுக்கு முன்னரே ஈழத்தில் பரவலாயிற்று. மும்மூர்த்திகள் முதலான இசை வாக்கேயக்காரர்கள் பல நூற்றாண்டுகளிற்கு முன்பே கர்நாடக இசையிலக்கணங்களையும் இசை உருப்படிகளையும் தெய்வீக இசைஞான நுண்ணறிவால் உருவாக்கி இவ்வுலக மாந்தரிடம் தந்துள்ளனர். இவர்கள் இயற்றிய கீர்தனைகளே கர்நாடக இசையை இன்றும் உயிர் வாழச்செய்து கொண்டிருக்கின்றன. உலக இசைகளில் மிக நுட்பமானது கர்நாடக இசையே. இவ்விசையானது தென்னிந்தியாவில் தோன்றி வளர்ந்து இன்று உலகமெங்கும் வாழும் அனைத்து மனிதர்களாலும் விரும்பப்படும் ஒரு சிறந்த இசைக்கலையாகப் பரவி வளர்ச்சி பெற்று வருகின்றது.

ஆனாலும் இக்கலையானது 1920களிற்குப் பிறகே ஈழத்தில் பரவலானதாக அறிய முடிகிறது. அதற்கு முன்னர் எம்மவரின் ரசனைக்குரிய கலைகளாக இருந்தவை நாட்டுப்புறக் கலைகளே. எனினும் இந்த நாட்டுப்புறக் கலைகளுள் கர்நாடக இசையின் தாக்கம் மிகுதியாகவே இருந்துள்ளது. அவ்வாறான கலைகள் மக்களின் பொழுதுபோக்கிற்கு உரியனவாகவும் வீட்டில் நடைபெறும் மங்கள வைபவத்தின் சந்தோஷ நிகழ்வுகளாகவும் மேலும் ஆலயத் திருவிழாக்களை சிறப்பிப்பனவாகவும் இருந்தன.

கலைகளை மூன்று நிலைகளில் நோக்கலாம்.

1- தொன்மைக்காலம் (Primitire art)
2- நாட்டுப்புறக்கலை (Folk art)
3- திருந்தியகலை (Classial art)

தொன்மைக்கலைகளானது நாட்டுப்புறக் கலைகளாகவும் நாட்டுப்புறக்கலைகள் செம்மைப்படுத்தப்பட்ட பின்னர் சாஸ்திரீயக் கலைகளாகவும் வளர்கின்றன.

ஈழத்தில் கர்நாடக இசையானது பரவுவதற்கு முன் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்த கலைகளாக சிலம்பாட்டம், காவடியாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், கோலாட்டம், கும்மி, பொய்க்கால் குதிரையாட்டம், வேதாள ஆட்டம், பேயாட்டம், வசந்தன், பாவைக்கூத்து, நாட்டுக்கூத்து, வில்லுப்பாட்டு, இசை நாடகம், என்பவற்றைக் கூறலாம். இவைதவிர எம்மவரின் கிராமிய நடனங்களான குறத்தி நடனம், பொம்மை நடனம், கும்மி நடனம், குரவை நடனம், ஏந்தல் நடனம், உருவேறிய நடனம், முகமூடி நடனம் -என்பனவற்றையும் கூறலாம். அத்துடன் நாட்டார் பாடல் வகைகளான தாலாட்டுப்பாடல், கல்யாணப்பாடல், கப்பற்பாடல், குழந்தைப் பாடல், மருத்துவிச்சி வாழ்த்துப் பாடல், ஒப்பாரிப்பாடல், பள்ளுப்பாடல், குறவஞ்சிப் பாடல், கும்மி, கோலாட்டம், கரகம், காவடிப்பாடல்கள் என்பவற்றையும் குறிப்பிடலாம்.

இவற்றைவிட கர்நாடக இசையின் தாக்கம் வெகுவாகக் காணப்படும் கலைகளான கதாப்பிரசங்கம், இசைச் சொற்பொழிவு, புராண படலம் வாசித்தல், வில்லுப்பாட்டு, இசை நாடகம் என்பனவும் தென்மோடி வடமோடிக் கூத்துக்கள் என்பனவும் கிராமியக் கலைகளாகவே மக்களால் பார்க்கப்பட்டன. இவற்றுள் இசை நாடகமானது முற்றுமுழுதாக கர்நாடக இசையால் அலங்கரிக்கப்பட்ட ஒரு கலைவடிவமாகும். 1920களிற்கு முன் இந்து ஆலயத் திருவிழாக்களை அலங்கரித்த பயனைப் பாடல்கள், இசை நாடகங்கள் என்பனவும் முக்கியமானவைகளாகும். இசை நாடகமானது கர்நாடக இசையின் அனைத்து நுட்பங்களும் உள்ளடங்கியதாக அமைக்கப்பட்டிருப்பதால் அக்கலையானது மக்கள் மத்தியில் தூய இசை ரசனையை ஏற்படுத்தியது எனலாம். அழகாக வேடமிட்டு இனிதாகப் பாடிச் சிறப்பாக நடித்து முத்தமிழ் முழக்கமிடும் கலையான இசைநாடகம் மக்களைக் கவர்ந்ததில் ஆச்சரியமில்லை.

இவ்வாறு மக்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்குப் பெற்ற இசை நாடகமே ஈழத்தில் கர்நாடக இசை பரவுவதற்கும் மக்களால் கர்நாடக இசை ஏற்றுக் கொள்ளப்படுவதற்கும் காரணமாக அமைந்தது எனலாம். ஆகவே, ஈழத்தின் கர்நாடக இசையின் பிறப்பும் வளர்ச்சியும் இசை நாடகக் கலையுடன் தாய்சேய் உறவை உடையதாகக் காணப்படுகின்றது. ஏனெனில் ஈழத்தின் இசை முன்னோடிகளுள் ஒருவரான எஸ். என்.சோமசுந்தரம் அவர்களின் தந்தையார் சிறந்ததொரு இசை நாடகக் கலைஞராவார். புத்துவாட்டி இரத்தினம் என அழைக்கப்படும் இவர் வயலின் மிருதங்கம் ஆர்மோனியம் போன்ற இசைக் கருவிகளை இசைக்கக் கூடியவராகவும் சிறந்த பாடகராகவும் விளங்கினார் என

அறியமுடிகிறது. மேலும் தமிழகத்திற்குச் சென்று கர்நாடக இசையில் முறைப்படி பயிற்சி பெறாமல் ஈழத்தில் வாழ்ந்த இசை முன்னோடிகளின் வரலாறுகளை உற்று நோக்கினால், அவர்கள் அனைவரும் இசைநாடகக் கலைஞர்களாகவே காணப்படுகின்றனர். எனினும், அவர்கள் கர்நாடக இசை தெரிந்தவர்களாகவே காணப்பட்டனர். இவர்கள் எப்படி எங்கு கர்நாடக இசை பயின்றனர் என்பதை அறிதல் அவசியமானதாகும்.

தென்னிந்தியாவில் இருந்து இசை நாடகத்திற்காக ஈழத்திற்கு வந்த இசை நாடகக் கலைஞர்கள் ஓய்வாக இருக்கும் வேளைகளில், அவர்களிடம் சென்று ஈழத்தின் இசை ஆர்வலர்களும் இசைக் கலைஞர்களும் கர்நாடக இசையையும் அதன் நுட்பங்களையும் தெரிந்து கொண்டனர் என்பது ஒரு கருத்து. இவ்வாறு இசைகற்கும் முறையானது அவ்வப்போது இசை நாடக நிகழ்விற்காக வரும் கலைஞர்களால் இங்கே அறிமுகப்படுத்தப்பட்டது. இதனால் கர்நாடக இசையை முறைப்படி பயிலவேண்டும் என்ற ஆர்வம் எம்மவர்களிடையே எழலானது.


## இசைநாடக வரலாற்றுப் படிமுறை

இனி ஈழத்தில் கர்நாடக இசையைப் பிரசவித்த இசை நாடகத்தின் சுருக்கமான வரலாற்றை நோக்குதல் முக்கியமானது. 1919ம் ஆண்டுக்கு முன்னரே இந்தியாவில் இருந்து இசை நாடகக் குழுவினர் ஈழத்திற்கு அடிக்கடி வந்து இசைநாடகங்களை நிகழ்த்திச் சென்றனர். இவ்வாறு, 1939ம் ஆண்டுவரை இந்தியக் கலைஞர்கள் வரவு தொடர்ந்தது. அதன் பின்னரும் இந்தியக் கலைஞர்களின் வரவு இருந்த தாயினும் ஈழத்தில் இசை நாடகக் கலைஞர்கள் தோன்றியமையாலும் சில அரசியல் நிலமைகளினாலும் இந்தியக் கலைஞர்களின் வரவு தடைப்பட்டுப் போனது. எனினும், இசைநாடக்கலை சிறப்பான வளர்ச்சியை அடைந்தது.

இசை நாடக்கக் கலை எப்படி கர்நாடக இசைக்கு உதவியாக இருக்கமுடியும் என்பதை சில உதாரணங்களுடன் கவனிப்பது சிறந்ததாகும். தென்னிந்தியாவில் இருந்து இசை நாடக நடிகர்களாக எம்.கே.தியாகராஜ பாகவதர், ரி.ஆர்.மகாலிங்கம், கே.பி.சுந்தராம்பாள், கே.பி.கிட்டப்பா போன்ற சிலர் ஈழத்திற்கு வந்து சென்றனர். இவர்கள் சாதாரணமாக இசை நாடக நடிகர்கள் என்ற வரையறைக்குள் அடங்குபவர்கள் அல்லர். கர்நாடக இசையைச் சுத்தமாகக் கற்றுத்தேறிய சிறந்த பாடகர்களுமாவர். எனினும், இவர்கள் தம்மை இசை நாடகத்துறையிலே இன்பமுடன் ஈடுபடுத்தி பெரும் இசைநாடக மேதைகள் என்னும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடத்தைப் பெற்றனர். தமிழகத்திலும், ஈழத்திலும் இவர்கள் இசை நாடகங்களை நடித்து இசைநாடகம் எப்படி அமைய வேண்டும் என்று வரைவிலக்கணத்தையும் தந்துள்ளனர்.

## இசைநாடகக் கலைஞர்களுக்கு இருக்கவேண்டிய தகைமைகள்

இசைநாடக நடிகர்களுக்கு இருக்க வேண்டிய முக்கியமான பண்பு கர்நாடக சங்கீதம் தெரிந்திருக்கவேண்டும் என்பது. இல்லையேல் கேள்விஞானத்திலாவது சுருதி லயம் பிசகாமல் பாடத்தெரிந்திருக்க வேண்டும். அப்படியானவர்கள் பிரதான பாத்திரங்கள் தவிர்ந்த - சிறு நடிகராகர்களாகச் சேர்ந்துகொள்ளலாம். இசையால் நடித்துக்காட்டப்படும் நாடகம் இசை நாடகம். கர்நாடக சங்கீதம் தெரியாமல் நடிக்கத்தெரிந்த ஒருவர் தனக்கு நடிப்பு வருகின்றது என்பதற்காக இசை நாடகத்துள் பிரவேசிக்கக்கூடாது. ஆனால், நடிப்பு வராத ஒருவர் சிறப்பாக பாடக்கூடியவராயின் அவரை இசை நாடகத்தில் இணைத்துக் கொள்வது பற்றி யோசிக்கலாம். பாத்திரத்திற்கு ஏற்ற தோற்றமும், பாடும் திறனும், உணர்ந்து நடிக்கும் நடிப்பாற்றலும், அழகு தமிழில் பேசும் ஆற்றலும் ஒருங்கே அமைந்த ஒருவரே இசை நாடகக் கலைஞராக முடியும். அத்துடன், இசை நாடகத்தில் ஹார்மோனியம் தவிர்ந்த வேறு எந்த மேலைத்தேச இசைக் கருவிகளையும் பயன்படுத்துவது முறையன்று. ஹார்மோனியத்துடன் மிருதங்கம், தபேலா போன்ற சுருதி சேர்க்கக் கூடிய தாள வாத்தியக் கருவிகளை உபயோகிப்பதே சிறந்தது.

**பிலிப் ஜோன்ஸ் மற்றும் நடிகமணி**

கர்நாடக இசையை நன்கு தெரிந்த நடிகர்கள் இசை நாடகங்களை நடித்தமையாலும் கர்நாடக இசை அறவு மிகுந்தவர்கள் இசை நாடகங்களையும், பாடல்களையும் உருவாக்கியமையாலும் இசை நுட்பம் மிகுந்த கலையாக இசை நாடகம் உருப்பெற்றது. ஒரு இசைக் கச்சேரியில் பாடுபவர் பக்கவாத்தியகாரர் ஆகியோருக்கிடையில் ஏற்படும் வித்துவ வெளிப்பாடுகளும் இசை நாடகங்களில் சக கலைஞர்களுக்கிடையேயும் - பக்க வாத்திய கலைஞர்களுக்கிடையேயும் - மேடைகளில் சர்வசாதாரணமாக நடைபெறும்.

## இசைநாடக இசை நுட்பங்கள்

☐ எல்லாவகையான தாளங்களிலும் பாடல்கள் அமைந்துள்ளன.

(ஆதி, ரூபகம், மிஸ்ர சாப்பு, ஆதி திஸ்ர நடை, சௌக்ககாலம், கண்டநடை)

☐ நுட்பமான எடுப்புக்கள் நிறைந்த பாடல்கள். (சம எடுப்பு, அனாகத எடுப்பு, அதீத எடுப்பு)

☐ தெம்மாங்குப் பாணியில் அமைந்த பாடல்கள்.

☐ ஹிந்துஸ்தானி இசை முறையில் அமைந்த பாடல்கள்.

☐ ரசங்களுக்கு ஏற்றவாறு நுட் பமான ராகங்கள். (தோடி, பைரவி, மோகனம், நட பைரவி, சிந்து பைரவி, ஹம்சத்வனி, சாமா, அடானா, கானடா, ஹாபி, தேஷ், சங்கராபரணம், காவேரி, புன்னாகவராலி, முகாரி, காம்போதி, செஞ்சுருட்டி, கல்யாணி, கேதாரகௌளை, பந்துவராளி, கன்னியாசி, ஆரபி, பிலஹரி என்பன சில உதாரணங்கள்)

☐ கர்நாடக இசையில் பயன்படுத்தப்படும் மனோதர்ம முறைகள் பின்பற்றப்படுகின்றன. (நிரவல் பாடும் முறை)

☐ நுட்பமான இசை உருப்படிகளை சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு சேர்த்துக்கொள்ளல்.

☐ லயநுட்பம், நடைபேதம் நிறைந்த பாடல் அமைந்துள்ளன.

☐ திருப்புகழ் போன்ற சந்தப் பாடல்களும் கையாளப்படுகின்றன (ஐமன் பாடல்கள்)

இவ்வாறான இசை நுட்பங்கள், அனைத்தும் இசை நாடகங்களில் கண்டிப்பாகக் கையாளப்பட வேண்டியனவாகவே காணப்படுகின்றன. இந்த இசை நுட்பங்கள் தெரியாத அல்லது விளங்காத ஒருவரால் இசைநாடக நடிகராக முடியாது.

தென்னிந்தியாவின் பிரபல இசைநாடக மேதைகள் இசை தெரிந்தவர்களாக விளங்கி இசை நாடத்தை மேடையேற்றினர். இரண்டு பிரதான பாத்திரங்களில் நடிக்கும் இருவரும் சிறந்த பாடகராயின் அந்தக் காட்சி மிகவும் சிறப்பாக அமைந்து விடும். இராக லய நுட்பங்களை இருவரும் பகிர்ந்து கொள்வர். பார்ப்போரும் மகிழ்ந்து கொள்வர்.

இவ்வாறு தென்னிந்திய கலைஞர்களின் இசை நாடகங்கள் ஈழத்தில் மேடையேற்

றப்பட்டபோது இவ்வாறான இசை இன் பங்களை மக்கள் பார்த்து இன்புற்றனர். கால ஓட்டத்தில் தென்னிந்திய கலைஞர் களுடன் ஈழத்துக் கலைஞர்களும் சேர்ந்து ஒரே மேடையில் நடிக்கும் வாய்ப்புக் களும் நிலைமைகளும் ஏற்பட்டபோது ஈழத்தின் இசைநாடக கலை வளர ஆரம் பித்தது. ஈழத்தின் இசைநாடக கலைஞர் கள் இசை நாடக நட்பங்களையும், இசை நட்பங்களையும் அவர்களிடம் இருந்து அறிந்து சேர்ந்து நடித்துப் பெருமை அடைந்தனர்.

தொடர்ந்து இந்தியக் கலைஞர்களின் வரவானது முழுமையாக தடைப்பட்ட போது ஈழத்தின் இசைநாடக் கலைஞர்கள் ஆங்காகே சபாக்களையும் குழுக்களை யும் அமைந்து நாடகங்களை மேடை யேற்றினர். இவ்வாறு இசை நாடகங்களில் தென்னிந்திய கலைஞர்களுடனும் தாமா கவும் நடித்த எம்முன்னோர் வரலாற்றில் முக்கியமானவர்கள். ஏனெனில், ஈழத்தில் கர்நாடக இசைக்கு தொண்டாற்றிய பெருமை அவர்களைச் சாரும். இன்று ஈழத்தின் சங்கீத வித்துவான்களாக திக ழும் பலரின் வாழ்க்கை வரலாறுகளை புரட்டிப்பார்த்தால் அவர்களுக்கு இசை நாடகத் தொடர்பு நிச்சயமாக இருக்கும்.

ஈழத்தின் இசை நாடக வரலாற்றிலே தென் னிந்திய கலைஞர்களின் வரவு தடைப் பட்டதன் பின்னர். இங்கே பலர் இசை நாடகங்களை மேடையேற்றி இருந்தாலும் முன்னர் குறிப்பிட்டது போன்று இசைநாட கக் கலைஞர்களுக்கு இருக்க வேண்டிய முழுமையான பண்புகளை உடையவராக திகழ்ந்த இசை நாடக கலைஞர்களுள் நடிகமணி வி.வி.வைரமுத்து அவர்கள் முதன்மையானவர். நடிகமணி அவர்கள் முறைப்படி கர்நாடக சங்கீதம் படித்த ஒருவர். இசை நட்பங்கள் விளங்கக் கூடிய ஒருவர். கல்பித, மனோதர்ம இசையை நன்கு அறிந்த ஒருவர். அத்து டன், ஆர்மோனியம், மிருதங்கம், புல் லாங்குழல் போன்ற இசைக் கருவிகளை யும் சிறப்பாக வாசிக்கக் கூடிய ஒருவர். இசை நாடகக் கலைஞர்களுக்கு இருக்க வேண்டிய அனைத்து தராதரங்களும் உடைய ஒருவராக இருந்தமையால், இவரது வசந்தகான சபாவின் நாடகங் கள் இசை நாடக வரன்முறைகளைக் காப்பாற்றத் தவறவில்லை. சிஷ்யர்கள் இவருடன் நடிக்கும்போது பயபக்தியுட னும், நிதானத்துடனும், ஒழுக்கத்துடனும் சிறந்த கலைஞர்களாக விளங்கினர். ஆனால், இவரது மறைவிற்குப் பின் ஈழத் தின் இசை நாடக்க கலையானது பாரிய பின்னடைவைச் சந்தித்துள்ளது. மூத்த அனுபவம் மிக்க ஒருவர் இல்லாததால் அனைவரும் தம்மைப் பெரியவர்களாக எண்ணி இசை நாடகக் கலையை தவ றான வழியில் இட்டுச் சென்றனர்.

## இன்றைய நிலை

ஈழத்தின் இசை நாடகத்தின் இன்றைய நிலை என்ன என்னபது பற்றி சிந்திப்பது சாலவும் பொருத்தமாகும்.

- ☐ ஈழத்தில் இசை நாடகம் தந்த கர் நாடக இசை வளர்ந்து கொண்டிருக் கின்றது. ஆனால், இசை நாடகம் இறந்து கொண்டிருக்கின்றது.

- ☐ கேள்வி ஞானத்தில் கூட சுருதியுட னும் லயத்துடனும் பாடமுடியாதவர்கள் பிரபல இசை நாடக்க் கலைஞர் ஆகும் துர்பாக்கிய நிலை ஈழத்தின் இசை நாடகக் கலைக்கு ஏற்பட்டுள்ளது.

- ☐ இசை நாடகக் கலையின் செம்மையை தூய்மையை அதன் கற்பைப் பாதுகாக்க வேண்டிய சில கலைஞர்கள் பணத்திற்கும் செல்வாக்கிற்கும் அடிமையாகி விலை மாதர் போலாகி விட்டனர்.

- ☐ காப்பாற்ற வேண்டியவர்கள் கைகழுவி விட்டார்கள்.

- ☐ சில இடங்களில் இசை நாடகம் நவீன மயம் என்ற பெயரால் சீரழிக்கப்பட்டுள் ளது. அதன் தன்மையே மாற்றப்பட்டுள் ளது.

- ☐ இசை நாடகங்கள், முறையான இசை தெரிந்தவர்களின் மேற்பார்வையின்றி கேள்வி ஞான அண்ணாவிமாரினால் தவறு தலான முறையில் நெறியாள்கைகள் செய் யப்படுகின்றன.

இவ்வாறு அழிவின் பாதையில் சென்று கொண்டிருக்கும் இசை நாடகக் கலையா னது காப்பாற்றப்படவேண்டும். இன்றைய நவீன மயமான காலகட்டத்தில் இக் கலையானது தகமையில்லாதவர்களினால் முறைகேடாக நிகழ்த்தப்படுவதனால் இக் கலையானது வரும் சந்ததியால் வெறுத்து ஒதுக்கப்படப்போகும் நிலைமையும் ஏற்பட லாம். அல்லது தரம் குறைந்த கலையாக மதிக்கப்படலாம். கர்நாடக இசையானது அதற்குரிய முறையிலே பேணப்படுவதால் இன்றும் உயர்ந்த நிலையில் உள்ளது. அதுபோல் இசை நாடகத்திற்குரிய முறை யிலே இக்கலையானது முன்னெடுக்கப் பட்டால் இக்கலை நிலை பெறும்.

ஆசைப்படும் எல்லோரும் இசை நாடகம் நடிக்கும் நிலையை மாற்றி எதற்கு எவர் தகுதியோ அவரைத் தெரிந்து இக்கலைக்கு உயிர் கொடுக்க வேண்டியவர்களாக நாம் இருக்கின்றோம். ஆகவே நாம் செய்ய வேண்டியது என்ன? இசை நாடகக் கலைஞர்களையும் இசை நாடக ஆர் வலர்களையும் அழைத்து கர்நாடக இசை தெரிந்தவர்களின் உதவியுடன் தகுந்த பயிற்சி அளித்து அவர்களை புனர் நிர் மானம் செய்ய வேண்டிய வரலாற்றுத் தேவை எமக்குள்ளது. நடிகமணி அவர் களின் வாரிசுகளாக உருவாகி இன்று இசைநாடகத்துறையில் நீண்ட அனுபவம் மிக்கவர்களாக இருக்கின்ற இசைநாடகக் கலைஞர்களான வ.செல்வரட்ணம், ம.தைரி யநாதன் ஆகியோருக்கு இக் கலையின் செம்மையைப் பேணவேண்டிய வரலாற் றுக் கடமை உள்ளது. இல்லையேல் மீண் டும் நடிகமணி அவர்கள் அவதரித்தால் அன்றி இசைநாடகக்கலையை எவராலும் காப்பாற்ற முடியாது.

## இந்திய அரங்கின்...

*(பக்கம் 7 தொடர்ச்சி)* நாடகக்காரர் போன்ற பலர் சின்னத்திரையிலும் சினிமா விலும் நாடகத்திலும் தமது இருப்பைப் பேணுகின்றனர்.

அரங்கத் தொழில்நுட்பங்களைக் கற்று வெளியேறும் பல மாணவர்கள் சினிமா வுக்குள் தொழில்நுட்ப ரீதியாக வேலை செய்வதனையும் காணமுடிகின்றன.

## அரங்கத் தொழில்நுட்பம்

அரங்கத் தொழில்நுட்பத்தில் வளர்ச்சிய டைந்த ஒரு நிலை இங்கு காணப்படுகின் றது. அது அவர்களுக்குக் கிடைக்கும் வசதி வாய்ப்புகளின் அடிப்படையில் உரு வாகியிருக்கலாம். பல நாடகங்களில் இந்த வசதி வாய்ப்புகள் சரியான முறையில் பயன்படுத்தப்படுகின்ற போதும் பல நாட கங்களில் அவை அவற்றுக்கான அர்த் தங்களை இழந்து விடுகின்ற நிலைமை யும் உண்டு.

இத்தொழில்நுட்பம் சார்ந்த பல சிறப்புத் தேர்ச்சி பெற்ற நபர்களினை இங்கு கண்டு கொள்ள முடிவதும் குறிப்பிடப்பட வேண் டிய விடயமாகும். இவை தவிர இந்திய அரங்கில் ஓராள் அரங்கு, ஊம அரங்கு போன்றவையும் வலுவான நிலையில் இருப்பதனைக் காணலாம். இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுபவர் அதிக பொருட் செலவின்றி பல்வேறு இடங்களுக் கும் எடுத்துச் சென்று ஆற்றுகை செய் வதை வசதியாகக் கருதுகின்றனர்.

இந்திய அரங்க நடவடிக்கையில் பலர் சுதந்திர அரங்கவியலாளர்களாகத் தொழிற்படுகின்றனர். அவர்கள் அழைப் பின் பேரில் எக்குழுவினருடனும் எதன் கோட்பாட்டு அரங்கச் செயற்பாடுகளுட னும் இணைந்து பணியாற்றுகின்ற ஒரு ஆரோக்கியமான நிலை காணப்படுகின் றது. எனினும் அவர்களிற் பலர் தமக்கான அடையாளங்களினையும் இழந்து விடவில்லை.

ஒப்பீட்டளவில் இந்திய அரங்க நடவடிக் கைகள் ஈழத்து அரங்க நடவடிக்கை களினை விடத் தொழில்முறை சார்ந்த வளர்ச்சியுடன் இருப்பதை அவர்களிடம் இருந்து நாம் கற்க வேண்டிய பாடமாகக் கொள்ளலாம்.

பாடசாலைகளில் மேடையேற்றப்படும்

# தீனக்குழந்தைகள்

**இ. விஜி**

சமூகத்தில் இன்று அரங்கு பல்வேறு தேவைகளுக்குப் பயன் படுத்தப்படுகின்றது. போர்க்காலத்தில் போரின் உடனடித் தேவை களைப் பேசிய அரங்கு போர் சற்று ஓய்ந்திருக்கும் வேளையில் போரினால் பாதிக்கப்பட்ட மனிதமனங்களைப் ஆற்றப்படுத்த முற்படுகின்றது. போரினால் நாம் எதிர்கொண்ட, எதிர்கொள்கின்ற பல்வேறு பிரச்சினைகளை அரங்கு பேசி வருகின்றது. அந்த வகையில் தே.தேவானந்தின் 'நெஞ்சுறுத்தும் கானல்', 'இடர்கள் கெடுக', 'முடக்கம்' போன்ற மிதிவெடி விழிப்புணர்வு நாடகங்கள் கடந்த ஆண்டுகளில் பாடசாலைகளில் மேடையேற்றப்பட்டன. அந்நாடகங்கள் பெரும்பாலும் மதிவெடியினால் ஏற்படும் பாதிப் புக்களையும் அப்பாதிப்புக்கு உள்ளானவர்கள் எதிர்கொள்ளும் இன்னல்களையும் பாதிப்புக்களில் இருந்து தப்பித்துக் கொள்வ தற்கான வழிகளையும் கூறுகின்றன. இப்பொழுது 'தீனக் குழந்தை கள்' எனும் நாடகம் தே.தேவானந்தினால் எழுதி, நெறியாள்கை செய்யப்பட்டு பாடசாலைகளில் மேடையேற்றப்படுகின்றது.

'தீனக் குழந்தைகள்' எனும் நாடகம் மிதிவெடியினால் பாதிக்கப் பட்டவர்கள் எதிர்கொள்ளும் உள நெருக்கீடுகளையும் அந்த நெருக்கீடுகளில் இருந்து அவர்கள் எவ்வாறு விடுபட முடியும் என்பதனையும், ஒரு சிறுவனை மையமாகக் கொண்டு கூறுகின் றது. மதிவெடியினால் தனது காலை இழந்து நிற்கும் சிறுவனை பொய்க்கால் போடுமிடத்திற்கு அழைத்து வருகின்றார் அவனது தந்தை. பொய்க்கால் போடுமிடத்தைப் பார்த்ததும் சிறுவன் "ஐயோ!. தசை!.. இரத்தம்!.." எனக் கதறி மயங்கி விழுகிறான்.

தந்தை செய்வதறியாது திகைத்து நிற்கும் வேளையில் தனது பொய்க்காலை மாற்ற வந்த சிறுமி ஒருத்தி அவரிடம் சென்று உரையாட முற்படுகிறாள். அந்த நேரத்தில் தந்தை நடந்த சம்ப வத்தை சிறுமிக்கு கூறுகிறார். அவ்வேளை, தந்தையின் மன்கண் முன் நடந்த காட்சி நிழலாடுகிறது. சிறுவர்கள் பலர் சேர்ந்து விளையாடுவதும், சிறுவன் தனது காலை இழந்து கதறும் சம்ப வமும் காட்சிகளாகின்றன. இக்கதையைக் கேட்ட சிறுமி அச் சிறுவனது மன நிலையை மாற்றுவதற்காக தான் சந்தோஷமாக இருப்பது பற்றியும், தாங்கள் சேர்ந்து விளையாடும் விளையாட் டுக்கள் பற்றியும் கூறுகின்றாள்.

ஆனை ஆனை ஆனை
அசைந்தாடும் ஆனை
உன்னானை என்னானை
நாம் விளையாடும் ஆனை

என்ற பாடலுடன் யானை ஒன்று கட்டப்பட்டு சுவாமி வீதி வலம் இடம்பெறுகின்றது. அவ்வேளையில் மதிவெடி பற்றிய அறிவித்தலும் இடம்பெறுகின்றது. வீதி உலாவில் பங்குகொள் ளும் அடியவர்கள் பிரசாதம் வேண்டும் நேரத்தில் அவசரமாக ஒற்றைக் காலுடன் எழுந்த சிறுவன் பிரசாதம் வேண்டுபவர்களை மிதிவெடி இருக்கும் பிரதேசத்திற்குள் சென்றுவிட வேண்டாம் என்று ஒலி பெருக்கியை வாங்கி அறிவித்தல் செய்வதும் இறுதி யில் அவனும் அதில் இணைந்து கொண்டு ஆடிப்பாடுவதுமாக நாடகம் முடிவடைகின்றது.

பிள்ளைகள் பலர் சேர்ந்து விளையாட்டுப் பொருள் செய்வதும், வாகனங்கள் செய்து விளையாடுவதும், வீதிவலம் நடத்துவதும், தம்மைத் தாமே அலங்கரித்து அழகு பார்ப்பதும் சிறுவர் விளை யாட்டுக்குரிய அம்சங்களே. இந்தத் தன்மைகள் உள்ளடக்கப் பட்டு நாடகம் படைக்கப்பட்டிருப்பது சிறப்பம்சமாகும். நாதஸ்

# ஜனகரலய மக்கள் களரி

## People's Theatre

நீண்ட காலமாகச் செயற்பட்டு வரும் அங்கீகரிக்கப்பட்ட நாடகக் கலை சமூகத்தில் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளுக்கு மாத்திரம் செல்லக் கூடிய நிலையில் உள் ளது. இதனைப் புரிந்துகொண்ட நாங்கள் 1948ஆம் ஆண்டு தொடக்கம் வீதி நாடகக் குழுவாக நாட்டின் பல பாங்களுக்கும் சென்று நாடகங்களை நிகழ்த்தினோம். இதன் மூலமாக உண்மையான அரங்கம் தொடர்பான அனுபவங் கள் சிலவற்றைப் பெற்றுக்கொண்டோம். அதனூடாக மக் களுக்கிடையில் விதிமுறை தொடர்பான எண்ணம் எம் மனதில் தோன்றியது.

ஒவ்வொரு இடத்திற்கும் சென்று செந்நெறி நாடகங்களை மேடையேற்றக்கூடிய அரங்கு ஒன்றை உருவாக்கினோம். இதற்காக நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றி நடத்திச் செல்வது இதன் நோக்கமாக இருந்தது. இந்த எண்ணக் கருவை மீண்டும் மீண்டும் புதுப்பித்து இருபத்தைந்து வருடங்களின் பின் தற்போது ஜனகரளய என்ற நாடோடி நாடகத் திட்டத்தைச் செயற்படுத்துகின்றோம். பராக்கிரம நீரியல்ல H.A.பெரேரா போன்ற நாடகக் கலைஞர்கள் இக் குழுவை வழிப்படுத்துகிறார்கள்.

இந்தக் குழுவில் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட சிங்கள, தமிழ் இளைஞர் யுவதிகள் உள்ள டங்கலாகத் 24 பேர் உள்ளனர். இதில் தயாரிக்கப்படுகின்ற ஒவ்வொரு நாடகங்களும் தமிழ் சிங்கள மொழிகளில் தயா ரிக்கப்படுகின்றன. மொழித் தடையில்லாமல் இலங்கையின் எல்லா மக்களும் நாடகங்களைப் பார்ப்பதற்கு ஏற்ப நாட கங்களை வழங்குவது இதன் நோக்கங்களில் ஒன்றாகும்.

குறு நாடகங்களையும் நீண்ட நாடகங்களையும் இக்குழு தயாரித்து மேடையேற்றுகிறது. தயாரிக்கப்படுகின்ற நாட கங்கள் 450 பேர் அமர்ந்து பார்க்கக்கூடிய நடமாடும் நாடக மேடையில் (கூடாரம்) மேடையேற்றப்படுகின்றன. மேலும் இந்தக் கூடாரத்தில் அந்தந்தப் பிரதேசக் கலை இரசிகர்களுடனும் கலைஞர்களுடனும் சந்திப்புக்கள், கலந் துரையாடல்கள் நடத்தப்படுகின்றன.

ஜனக்கரலய நாடகக் குழு வெவ்வேறு இடங்களில் நாடகங் களை மேடையேற்றும் அதேவேளை பாடசாலை மாணவ மாணவிகளிற்கான நாடகக் களப்பயிற்சிகள், செயல் அமர்வு கள், நாடக இரசனை தொடர்பான நிகழ்ச்சிகளை நடத்த வும் திட்டமிடப்பட்டுள்ள. மேலும், சமூகத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் உளரீதியான அபிவிருத்திக்கு உதவியாக இருக் கும் பிரயோக அரங்கச் செயல் முறையும் இதன் ஓர் அம்சம்.

உண்மையான சமாதானத்தை எதிர்பார்ப்பதற்கு சிங்கள தமிழ் முஸ்லீம் மக்களுக்கிடையில் கலாசார ரீதியான ஒருமைப்பாடு வளர்ச்சியடைய வேண்டும். எனவே இந்த நாடகக் கலை சார்ந்த செயற்பாடாக அமைய வேண்டு மென்று ஜனக்கரலய நாடகக் குழு விரும்புகின்றது.

- பராக்கிரம நீரியெல்ல

# நிர்வாணம்

## - நாடக விமர்சனம்



**நி**ர்வாணம் நாடகம் ஜனகரளய என்ற பல் இன இளைஞர்கள் அடங்கிய நாடகக் குழுவினரால் 01.12.2004 அன்று செயல்திறன் அரங்க இயக்க அலுவலகத்தில் மேடையேற்றப்பட்டது.

சிங்கள நாடக உலகிலும், தொலைக்காட்சித் தொடர்களிலும் நன்கு அறியப்பட்டவர்களான பராக்கிரம நீரியல்ல, H.A. பெரேரா ஆகியோர் இந் நாடகத்தை தயாரித்துள்ளார்கள்.

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின் வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையில் பலர் 'கலைப் பாலங்கள் அமைத்திருக்கிறார்கள். ஒன்று கூடல்கள், கருத்தரங்குகள், பட்டறைகள், புத்தக வெளியீடுகள் என்பன நடத்திருக்கின்றன. ஒரு சில ஆங்கில நாடகங்கள் வடக்கில் மேடையேற்றப்பட்டுள்ளன. இடையிடையே திரைப்பட விழாக்களும்கூட நடந்திருக்கின்றன. இவை அனைத்தும் சமாதானத்திற்கு வலுச்சேர்க்கும் முயற்சிகள் என்று சொல்லப்படுகின்றன. இந்த வரிசையில் ஜனகரலய செயற்திட்டமும் இணைந்து கொள்கிறது.

இவ்வாறான முயற்சிகளால் விளையும் பயன் என்ன? அரசியல்வாதி கள் மீதும் இனவாதிகள் மீதும் கலைச் செயற்பாடு தாக்கத்தை ஏற்படுத்த முடியுமா? என்ற விடைகளைக் காணமுடியாத கேள்விகள் உண்டு. இப்பினும் ஜனகரளய அமைப்பு எல் இனம் சார்ந்தவர்கள் ஓர் இடத்தில் ஒன்றாக ஒரு வேலையை செய்ய முடியும் என்பதை சாத்தியமாக்கிக் காட்டியிருக்கிறார்கள். இது முக்கியமானதும் குறிப்பிடக் கூடியதமான அடைவு.

ஜனகரளய அமைப்பில் தமிழ், சிங்கள, முஸ்லீம் இளைஞர்கள் உள்ளார்கள். இவர்களுக்கு நான்கு மாதங்கள் தொடர்ச்சியாக வழங்கப்பட்ட அரங்கப் பயிற்சிகளுக்குப் பின் 'நிர்வாணம்' நாடகம் தயாரிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து பல தரமான நாடகங்களைத் தயாரித்து நாட்டின் பல்வேறு இடங்களிலும் மேடையேற்றுவதனூடாக நாடக இரசனையை அதிகரிக்க எண்ணியுள்ளார்கள்.

'நிர்வாணம்' தமிழ் மொழியில் ஆற்றுகை செய்யப்பட்ட நாற்பத்தைந்து நிமிட நாடகம். பரிநிர்வாண தேசம் - சிங்களதேசம் நிர்வாண தேசமாகிறது. இதற்கு என்ன செய்யப் போகிறோம் என்பதான தொனிப் பொருளை நாடகம் கொண்டுள்ளது. மிக இலகுவான கர்ண பரம்பரையாகக் கடத்தப்பட்ட கதையை சம கால அரசியலை விமர்சிப்பதற்காகப் பயன்படுத்தியிருக்கிறார்கள். தேசத்தின் அரசன் ஆடைகள் மீது காணப்பட்ட அதீத விருப்பு காரணமாக எப்போதும் விதம் விதமாக ஆடைகள் அணிய விரும்புகிறான். வெளிநாட்டுத் தையல்காரர்களை அழைத்து தனது மன திற்குப் பிடித்த ஆடையொன்றை தைத்துத் தருமாறு கேட்கிறான். வெளிநாட்டுத் தையல்காரர் அரசனைத் தமது புத்திசாலித் தனத்தினால் நிர்வாணமாக்குகிறார்கள். 'அரண் எவ்வழியோ குடிகளும் அவ் வழியே' என்பதற்கேற்ப அமைச்சர்கள் மக்கள் அனைவரும் நிர்வாணமாக்கப்படுகிறார்கள் என்பதாக கதை அமைகிறது.

வெளிநாடுகள் இலங்கை போன்ற நாடுகளில் எவ்வாறு தமது பொருட்களை, எண்ணங்களை, சித்தாந்தங்களை வியாபார மூளைகளைப் பாவித்து தந்திரமாக, இலவசமாக தணித்து விடுகிறார்கள். அதனால், 'சுயம்' தொலைந்து நிர்வாணிகளாக இருக்கப் போகிறோம் என்பதை நாடகம் உள்ளுறை பொருளாகச் சுட்டுகிறது.

சிங்களப் பாரம்பரிய நாடக வடிவங்களில் ஒன்றான 'கோலம்' வடிவத்தை அடிப்படையாகக் கொண்டு நாடகம் வடிவமைக்கப்பட்டுள்ளது. நாடக ஓட்டம் முழுவதும் ஹாசியப் பண்பு மேலோங்கி நிற்கின்றது. வார்த்தைகளும் அங்க அசைவுகளுக்கும் இடையில் இணைவுத்தன்மை காணப்படவில்லை. வார்த்தைகளும் அங்க அசைவுகளும் இணைந்த இலாவகத்துடன் கூடிய பூரணத்துவத்தை உணரமுடியவில்லை.

நாடகம் அடிப்படையில் ஜதீகத் தளத்தைக் கொண்டிருந்தது என லாம். ஜதீகப் பண்பை துலக்கு வதாக ஆடை அணிகள் காணப்பட்டன. இருப்பினும், இதனைக் குழப்புவதாக அரசனின் நிர்வாண ஆடை அணிவிப்பு வைபவத்திற்கு சமூ கம் தரும் பத்திரிகையாளர்களின் யதார்த்த உடை, வார்த்தைகள் அமைந்திருந்தன. இதேபோல், இரண்டு எடுத்துரைஞர் பாத்திரங்களின் உள்நுழைவுகளும் வெளி யேறுகைகளும்கூட பொருத்தம் இன்றிக் காணப்பட்டன. எடுத்துரைஞர் பாத்திரங்கள் மேலும் இறுக்கமாக நாடகத்துடன் பிணைக்கப்படலாம்.

மூன்று பக்க பார்வையாளர்களை நோக்கியதாக நடிகர்களின் 'தெறிப்புக்கள்' காணப்படவேண்டும். நாடக இறுதியில் வெளிநாட்டு தையல்காரர்கள் பார்வையாளர்களுக்கு நிர்வாண ஆடைகளைக் கொடுக்கிறார்கள். அவ்வேளை, பார்வையாளர்கள் அவற்றை வேண்டாம் என்று சொல்ல வேண்டும் என்பது எதிர்பார்ப்பு. அதாவது. நாடக இறுதியில் பார்வையாளர்கள் பங்குகொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். இதற்குரியதாக நாடகம்

*(பார்க்க பக்கம் 15)*

# தேசிய நாடக விழா-2004

கலாசார அலுவலர்கள் திணைக்களம் மற்றும் இலங்கைக் கலைக்கழகம் தேசிய நாடக சபையின் ஏற்பாட்டில் தேசிய நாடக விழா 2004, டிசெம்பர் 02ஆம் திகதி முதல் 19ஆம் திகதி வரை கொழும்பு, ஜோன் டி.சில்வா ஞாபகார்த்த அரங்கில் நடைபெற்றது.

இந்த விழாவில் 2003ஆம் ஆண்டு அரச குறுநாடக விழாவில் தெரிவான காமினி ஜெயக்கொடியின் 'நிவன் யனகங்', லசந்த பிரான்ஸிசின் 'கோச்சிய எனகங்', சஞ்ஜீவ உபேந்திராவின் 'ரோசமல' ஆகிய நாடகங்களும் 200ம் ஆண்டு அரச நாடக விழாவில் தெரிவான சிறந்த நாடகமான சரத் கொத்தலாவலையின் 'சூக்கரயெக சமக' நாடகமும் மேடையேற்றப்பட்டன. இவற்றோடு, கே.மோகன் குமாரின் 'வெள்ளைச் சிறகுகள் விரிகின்றன', ஜெஹான் எலோய்சியஸ்ஸின் 'தரிச்சுவல்', பொன் கிருஸ்ணமூர்த்தியின் 'மனு விலங்கு', ஜோன்சன் ராஜ்குமாரின் 'கொல் ஈனும் கொற்றம்' ஆகிய நாடகங்கள் சிறப்பு ஆற்றுகைகளாக மேடையேற்றப்பட்டன.

மேலும் நாடக விழா - 2004இன் இறுதிச் சுற்றுக்குத் தெரிவான கீழ்வரும் நாடகங்களும் மேடையேற்றப்பட்டன. ஜெரோம் லெக்ஸ்மனின் 'ஆயெத் என்னே நே', ரிச்சர்ட் மான முதலியின் 'சாகுந்தல', சாமல் ரணசிங்கவின் 'கலுச மனல்லு', காவ்ய இந்திரஜித்தின் 'குவேனி' நாடகம், ருவன் மலிக் பீரிஸ் மற்றும் கலன ஜயநாத் குணசேகரவின் 'தாச மல்லிகே பங்களாவ' மக்கள சேனாநாயக்கவின் 'யூலிமெனவிய' பிரியங்கர ரத்நாயக்கவின் 'ஈடியஸ்' ஆகிய நாடகங்கள் மேடையேற்றப்பட்டன.

1976ஆம் ஆண்டிற்குப் பின்னர் தற்போதுதான் தேசிய நாடக விழா நடந்திருக்கிறது. நாடகக் கலைஞர்களுக்கிடையில் போட்டி மனப்பாங்கை உருவாக்கி விருதுகளுக்காக கலைஞர்கள் முண்டியடிப்பதை அடிப்படையாகக் கொண்டு இந்த நாடக விழாப் போட்டிகள் நடைபெறுகின்றன. நாடகப் போட்டியில் தமிழ் பகுதிகளில் இருந்து எந்தவொரு நாடகமும் பங்கு பற்றவில்லை. வடக்கு - கிழக்கு நாடகக் கலைஞர்கள் பங்குகொள்வதற்கு வாய்ப்பான சூழல் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு உண்டு. இதனை நிவர்த்தி செய்வதற்காக தேசிய நாடக சபை உறுப்பினர்களான கலாபூஷணம் கலைச்செல்வன், வ.ஆ.தங்கவேலாயுதம் (தேவரண்ணா) ஆகியோரின் முயற்சியால் வடக்கு, தலைநகர் போன்ற பகுதிகளிலிருந்து மூன்று தமிழ் நாடகங்கள் விசேட அழைப்பின் பேரில் மேடையேற்றப்பட்டன.

தேசிய நாடக சபை உறுப்பினர் கலா பூஷணம் கலைச்செல்வன் அவர்களின் முயற்சியால் இம்முறை நாடக விழாவில் விளம்பர நோட்டீஸ் தொடக்கம் விழாவில் நாடக அறிவித்தல் வரை தமிழுக்கு முக்கியம் கொடுக்கப் பட்டதாக அறிகிறோம். இதற்கு முன் நடந்த நாடக விழாக்கள் சிங்கள நாடக விழாக்களாகவே நடைபெற்றன.

தேசிய நாடக விழாவின் விருது வழங்கும் வைபவம் 2004, டிசெம்பர் 19ஆம் திகதி ஜோன் டி சில்வா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலாசார, தேசிய மரபுரிமை பற்றிய அமைச்சர் கௌரவ விஜித ஹேரத், பிரதமர் மிந்த ராஜபக்ஷ ஆகியோர் கலந்துகொண்டனர். மஹிந்த ராஜபக்ஷ பரிசில்களை வழங்கி கலைஞர்களைக் கௌரவித்தார்.

இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக சிங்கள மூத்த கலைஞர் ஒருவருக்கு வழங்கப்படும் கௌரவத்திற்கு நிகரான கௌரவம் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் நாடகத்துறையில் ஈடுபட்டு வரும் கலைஞர் நவாலியூர் நா.செல்லத்துரை அவர்களுக்கு வழங்கப்பட்டது. இவருக்கு விருதுக் கேடயமும் ஐம்பதாயிரம் ரூபாவும் வழங்கப்பட்டது. நடிப்புத் திறமைக்காக திருமதி மணிமேகலை ராமநாதனுக்கு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. 2005 மார்ச் மாதம் அரச நாடக விழா ஒன்றை நடத்தத் திட்டமிருப்பதாகவும் தெரிகிறது.





*ஜனாதிபதியால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக் கப்படுகிறார் நா.செல்லத்துரை. (மேலே) அமைச்சர் விஜித ஹேரத் கலாபூசனம் கலைச்செல்வன், தேவ ரண்ணா ஆகியோருடன் விருது நாயகன் (கீழே)*

## 'பாஞ்சாலி சபதம்' நாட்டிய நாடகம்

2004 ஆம் ஆண்டு 'பாஞ்சாலி சபதம்' நாட்டிய நாடகம் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட தமிழ்த்தினப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி மாணவிகளின் இந்நாட்டிய நாடகத்தை நெறிப்படுத்தி இருப்பவர் பே.பிரியதர்சினி. பாரதியாரின் 'பாஞ்சாலி சபதம்' நாடகத்தை தொகுத்து இருப்பவர் குழந்தை ம.சண்முலிங்கம். இந்நாடகத்திற்கான இசை அமைப்பை சக்திதேவி சிவகுமார் மேற்கொண்டுள்ளார். நட்டுவாங்கம் சு.பிரவாசினி. கொழும்பில் நடைபெற்ற போட்டியில் சான்றிதழ் வழங்கி கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

பே.பிரியதர்சினி பிரபல நடனக் கலைஞர் சாந்தினி சிவநேசனின் மாணவி ஆவார். அண்மையில் நாடக அரங்கக் கல்லூரி தயாரித்த 'ஆர்கொளோ சதுரர்' நாடகத்தில் முக்கிய பாத்திரமேற்று ஆடியவர். 'ஆர்கொளோ சதுரர்' நாடகம் நாட்டிய நாடகப் படைப்பாக்கத்தில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.

## கைகூப்பி அஞ்சலி



நாடக நெறியாளரும் ஆசிரியரும் தமிழ் மூதறிஞருமான கலாநிதி க.சொக்கலிங்கம் (சொக்கன்) அமரத்துவம் அடைந்துள்ளார். தனது உடல் சுகயீனமான நிலையிலும் ஐந்தாவது கூத்தரங்கத்திற் காக 'நடிப்பு: அது என்ன பாண்டம்' என்ற தலைப்பில் கருத்துரை ஒன்றைத் தந்திருந்தார். இவருக்கு விடுதலைப் புலிகள் நாட்டுப்பற்றாளர் என்ற விருது வழங்கிக் கௌரவித்துள்ளனர். இவரது இழப்பினால் துயருறும் குடும்பத்தாருடன் நாமும் துயர் பகிர்கின்றோம். கைகூப்பி அஞ்சலி செலுத்துகின்றோம்.

# சிறுவர் அரங்கக் களப்பயிற்சி



ஆசிரியர் கலாசாலை மாணவர்களுக்கு குழந்தை ம.சண்முகலிங்கம் மற்றும் விரிவுரையாளர் இ.கமலநாதன் ஆகியோர் களப்பயிற்சிகளை வழங்குகின்றனர். செயல்திறன் அரங்க இயக்கத்தின் சார்பில் இநதப் பயிற்சிகள் இடம்பெற்றன.

**கோ**ப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் வருடந்தோறும் நடைபெறுகின்ற ஆசிரியர்களுக் கான சிறுவர் அரங்கக் களப்பயிற்சியினை நாடக அரங்கக் கல்லூரி நடத்தி வந்தது. இதில், செயல்திறன் அரங்க இயக்க அங்கத்தவர்களும் கலந்துகொள்வர். இந்த வருடம் 29.10.2004ஆம் திகதி தொடக்கம் 03.11.2004ஆம் திகதி வரை நடைபெற்ற இக்களப்பயிற்சியினை செயல்திறன் அரங்க இயக்கம் நடத்தியது.

ஐந்து நாட்கள் தொடர்ந்து நடைபெற்ற இக்களப்பயிற்சியில் 105 ஆசிரியர்கள் பங்கு பற்றினார்கள். பயிற்சியில் அரங்க விளையாட்டுக்கள், சிறுவர் பாடல்கள், பாத்திர அசை வுகளோடு கதைசொல் லல், எழுத்துரு எழுதுதல், எழுதிய எழுத்துருக்களை நாடகமாகத் தயாரித்தல் போன்ற பயிற்சிகள் நடைபெற்றன. அத்தோடு, செயல்திறன் அரங்க இயக்கத்தின் ஒழுங்கமைப்பில் ஜனகரளய ஆற்றுகைக் குழுவினரின் ஆற்றுகை ஒன் றும் இறுதிநாள் மேடையேற்றப்பட்டது.

ஏழு குழுக்களாகப் பிரித்து எழுதப்பட்ட எழுத்துருக்கள் ஏழும், நாடகங்களாக தயாரித்து இறுதி நாள் மேடையேற்றப்பட்டன. பார்வையாளராக முதலாம் வருட ஆசிரியர்கள் கலந்துகொண்டார்கள்.

நாடகத்தை அரங்கேற்றுவதில் இறுதிநாள் ஆசிரியர்கள் மிகவும் ஆர்வமாக இருந்தார்கள். சிறிய குழந்தைகள் போல் வீட்டில் இருந்து தமது பாத்திரத்திற்கு பொருத்தமான மிருகத்தினுடைய வால், செவி, உடை மற்றும் கைப்பொருட்கள் என்பவற்றைக் கொண்டு வந்திருந்தார்கள். அத் தோடு, பாத்திரத்திற்கு ஏற்ற ஒப்பனைகளை தமக்குத்தாமே மேற்கொண்டார்கள்.

ஆபத்திற்கு உதவுவோம், வீரச்சிறுவன் யம்போ, ஆபத்தை விலக்குவோம், உயிர்களிடத்தில் அன்பு, உறவுகளை வளர்ப்போம், ஒற்றுமையே பலம், குட்டிஆடாரும் குள்ளநரியும் ஆகிய நாட கங்கள் மேடையேற்றப்பட்டன.

# கூட்டாஞ்சோறு நிகழ்வில் பெண்களின் தெருவெளி அரங்காற்றுகை



கூட்டாஞ்சோறு நிகழ்வில் பெண்கள் தமது தெருவெளி ஆற்றுகையை வெற்றிகரமாக நிகழத்துகிறார்கள்.

**கி**ராமங்கள் தோறும் பல முன்னேற்றச் செயற்பாடுகளில் முனைப்படன் செயற்பட்டு வரும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் மற்மோர் முயற்சியாக பின்தங்கிய கிராமங்களின் தேவைகளைக் கண்டறியும் நோக்கிலே அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தில் பெண்கள் அபிவிருத்திப் பிரிவினரின் ஏற்பாட்டில் 'ஊரோடு உறவாடுவோம்' என்ற நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வெறுமனே கலந்துரையாடல் ஊடாகவோ, கூட்டங்கள், சந்திப்புக்கள், கருத்துப் பரிமாற்றங்கள் மூலமோ மக்களின் தேவைகளைக் கண்டறிதல் என்பது நடைமுறைக்கு ஒவ்வாதது. இதனை நிவர்த்தி செய்ய மக்களோடு மக்களாகி மக்களின் தேவைகளைக் கண்டறிவதற்கு அரங்கைப் பிரயோகித்து புதியதொரு அரங்க ஆற்றுகை வடிவத்தையும் வெளிக்கொணர்ந்திருக்கிறார்கள்.

இதில் செயல்திறன் அரங்க இயக்கம் தெருவெளி ஆற்றுகை ஒன்றை ஒழுங்குபடுத்தி அரச ஊழியர்களது அசமந்தப் போக்கும், சமூகத்தின் பொறுப்பானவர்களின் பொறுப்பற்ற தன்மைகளும் வெளிவருவதற்குக் களம் அமைத்துக் கொடுத்தது. இதனை இனம்கண்ட மக்கள் ஆற்றுகை என்பதனையும் மறந்து தங்கள் ஆதங்கங்களை மனம் திறந்து வெளியிட்டனர். இந்நாடகம் 6.11.2004, 15.11.2004, 19.11.2004 ஆகிய திகதிகளில் கரம்பைக் குறிச்சி, நாவற்குழி கைதடி, கோவிலாக்கண்டி கைதடி ஆகிய இடங்களில் போடப்பட்டது.

# அரங்கு ஊடான உளசமூக மேம்பாட்டு


**சு**னாமி பேரலைத் தாக்கத்தினால் பாதிக் கப்பட்ட மக்கள் யாழ். மாவட்டத்தில் தற்போது 17 இடைத்தங்கல் முகாம்களில் குடியமர்த்தப் பட்டுள்ளனர். இதில் தங்கியுள்ள மக்களின் உள நெருக்கீட்டை தீர்ப்பதற்கான செயற்றிட்டங்கள் நடை பெறுகின்றன. முக்கியமாக சிறுவர்களின் உளநெருக்கீட்டைத் தீர்ப்பதற்கு அரங்கச் செயற்றிட்டங்கள் நடைபெறுகின் றன. சர்வதேச அரசார்பற்ற நிறுவனங் களின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படுகின்ற இச்செயற்பாட்டில் சிறுவர் கள் விளையாடு தல், ஆடுதல், பாடுதல், பாகமாடுதல், கதை சொல்லல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். இது சிறுவர்களுக் கான மகிழ்வளிப்பு செயற்பாடாகவும் கல்வியூட்டல் செயற்பாடாகவும் அமைகிறது.

உறவுகளை இழந்து துயரில் ஆழந்திருக் கின்ற பெரியவர்களுக்கான அரங்கச் செயற்றிட்டங் கள் போதியளவு நடைபெறவில்லை. ஒரு சில முயற்சிகள் ஆங்காங்கே மேற்கொள்ளப்பட் டாலும் அவை போதிய திறன் இல்லாதவர்களால் மேற்கொள்ளப்படுவதால் தேவையறிந்த செயற்பாடாக அமையவில்லை. மேலும், அரங்கினூடான உளசமூக மேம்பாட்டுச் செயற்றிட்டம் சீரான திட்டமிடல் இன்றி மேற்கொள்ளப்படுவதையும் காணமுடிகின்றது. திட்டமிடல் சீராக இல்லாததால் போதாமைகளுடன் கூடிய தொடர்ச்சியற்ற செயற்பாடுகளாகக் காணப்படுகின்றன.



வடமராட்சி கிழக்கில் உளசமூகப் பணிச் செயற்பாட்டில் பங்குபற்றிய சிறுவர்கள் தமது பாதிப்புக்களில் இருந்து மெல்ல மெல்ல மீண்டு வந்து அன்றாடச் செயற்பாடுகளில் ஈடுபட ஆரம்பித்துள்ளனர். அவர்களில் மூன்று சிறுவர்கள் இங்கே தமது திறன்களை மற்றவர்களுக்கு வெளிப்படுத்துகின்றனர்.

# பதிவுகள்


சிவாஜி நாடக மன்றத்தாரின்
மகத்தான தயாரிப்பு

"சதியின் பரிசு"

இடம்: உயிலங்குளம்
காலம்: 26-4-59 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: 9-30 இரவு

விறுவிறுக்கும் வண்டமிழ் வசனம்
கலைபுரியிலே கவின்காணும் சித்திரம்
கற்பனையிலே ஒரு திருப்புமுனை
கருத்திலே ஒரு புரட்சி
உணர்ச்சி ததும்பும் நடிப்பு
பயங்கரமான போர்

கதை வசனம் பாடல்கள் & டைரக்ஷன் நவாலியூர் நா. செல்லத்துரை,
பின்னணி வாத்தியம் யாழ்நகர் மித்திரன் சகோதரர்,
இசை ரேடியோ புகழ் K. குழந்தைவேலு,
ஸ்ரேச் மனேஜர்: K. சூசைதாசன்,
உதவி: M. P. சுகுமாரன்,

டிக்கெட் விபரம்: ரூ. 2. 1. சிறுவர்களுக்கு சதம் 50.

எமது அடுத்த வெளியீடு
"மன்றாடும் மனிதன்" (சமூக நாடகம்) 28-4-59

## சதியின் பரிசு

சிவாஜி நாடக மன்றத்தாரின் தயாரிப்பில் சதியின் பரிசு என்ற நாடகம் உயிலங்குளம் என்ற இடத்தில் 26-04-1959இல் இரவு மேடையேற்றப்பட்டதற்கான பதிவு இதுவாகும். இந் நாடகத்தின் கதை, வசனம், பாடல்கள் என்பவற்றை எழுதி நெறியாள்கை செய்தவர் நவாலியூர் நா.செல்லத்துரை. இசை வழங்கியவர் ரேடியோ புகழ் கே.குழந்தைவேலு. பின்னணி வாத்தியம் யாழ் நகர் மித்திரன் சகோதரர்கள். ஸ்டேஜ் மனேஜராக கே.சூசைதாசனும் இவருக்கு உதவியாக எம்.பி.சுகுமாரனும் செயற்பட்டுள்ளனர்.

ஆவணம் தந்துதவியவர்: நவாலியூர் நா.செல்லத்துரை

## சிறப்பிதழ்

கூத்தரங்கம் எதிர்வரும் 2005 மார்ச் மாதத்தில் ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்துகொள்கிறது. இதனை முன்னிட்டு சிறப்பு இதழ் ஒன்றை வெளியிட எண்ணியுள்ளோம். இந்த இதழுக்கு நாடகத்துறை சார்ந்தோரிடம் இருந்து ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம். ஆக்கங்கள் பெப்ரவரி 25ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும். புதிய ஆண்டில் புதுத்தெம்புடன் கூத்தரங்கம் உங்கள் கைகளில் தவழும்.

## நிர்வாணம்...

*(பக்கம் 12 தொடர்ச்சி)* வளர்த்தெடுக்கப்படவில்லை. பார்வையாளர்களை பங்கு கொள்ள வைப்பதற்கு சீரான முறையில் கடுமையாக உழைத்தாக வேண்டும்.

நாடகம் பெண்மைப் பண்பு கொண்ட ஆண் பாத்திரம் ஒன்றின் ஹாசியத்தின் ஊடாக நகர்த்தப்படுகின்றது. இங்கு, கருத்து அல்லது சொல்ல வருகின்ற விடயத்தை விட ஹாசியப் பண்பு மேலோங்கி நிற்பதும் நெருடலாக இருந்தது.

இருப்பினும் ஒரு சிறிய நாடோடிக் கதையை ஒரு நாடகமாக உருவாக்க முயற்சித்திருப்பது பாராட்டுக்குரியது. தொடர்ந்து நாட்டின் பல்வேறு இடங்களிலும் இந்நாடகத்தை மேடையேற்றி புத்திசாலித்தனத்தின் ஊடாக அளிக்கப்படுகின்ற எமது சுயத்தில் இருந்து எம்மைப் பாதுகாக்க நாம் வழிகளைத் தேட வேண்டும் என்ற எண்ணத்தை மக்கள் மத்தியில் விதைத்து அதற்கான தொடர் நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். அப்பணியை மக்கள் களரி அமைப்பு செவ்வனே மேற்கொள்ளும் என்று நம்புவோம்.

**வாசகர்களுக்கு:**

*பதிவுகள் பகுதியில் பிரசுரிப்பதற்காக இவ்வாறான அரிய ஆவணங்களை (படங்கள், பிரசுரங்கள், துண்டுப்பிரசுரங்கள், நுழைவுச்சீட்டுக்கள், வெளியீடுகள்) தங்களிடம் இருந்து எதிர்பார்க்கின்றோம். பிரதியாக்கம் செய்யப்பட்டதன் பின்னர் அனைத்தும் மீளக் கையளிக்கப்படும்.*

## முடிந்தும் முடியாதவற்றைப்...

*(பக்கம் 04 தொடர்ச்சி)* நினைவுகள் - மாறுதல்கள் சமூகத்தின் வக்கிர நினைப்புக்கள், இடப்பெயர்வுகள், குடிசை வாழ்வுகள் எனக் காட்சிச் சட்டங்கள் தெளிவாகவும் நேர்த்தியாகவும் அசைந்திருக்கின்றன. காட்சிகள் வர்ண ஜாலம் மிகுந்தவை. அதற்குப் பொருத்தமான ஒளியூட்டல்கள் கிடைத்திருக்க வேண்டும்.

ஆற்றுகையின் நேர அளவு ஒரு மணித்தியாலமும் இருபது நிமிடங்களும் கொண்டிருந்தது. காட்சிகளின் நகர்வு மந்த கதியிலே இருந்து இடையிடையே வேகங் கொண்டது. இங்கே 'வேகம்' என்பது அசைவின் வேகத்தைக் மட்டும் கருதவில்லை. கதை, உணர்வு, வெளிப்பாடுகள், காட்சிகள் என்பவை அடங்கலாகவே நாடகத்தின் வேகம், லயம் புரிந்து கொள்ளப்படுகின்றது. காட்சிக் கோர்வைகளின் இணைப்பு ஆங்காங்கே காரண காரியத் தொடர்புடன் இணைக்கப்படுவதும் அவசியமாகின்றது. அப்படியாயின் நாடகக் கட்டமைப்பு மேலும் வலுவுடைய வாய்ப்புண்டு.

எப்படியாயினும் எம்மத்தியில் வாழும் கதை, மறக்க முடியாத கதை, மறக்கவும் கூடாத கதை நாடகத்தில் வார்த்தெடுக்கப்பட்டமை வரவேற்கப்பட வேண்டியதே. 'அக்கினிப் பெருமூச்சு' சமதளத்தில் இன்னொரு நாடக ஆற்றுகையாக இந்நாடகம் பயணிக்க வேண்டும். பேசப்பட வேண்டியவை பேசப்படும்போது அதற்கெனப் பெறுமதியுண்டு. நிமிர்ந்த நன்நடையும் நேர்கொண்ட பார்வையும் வானோர்கள் வந்திறங்கிக் கொடுக்கும் விடயங்களல்ல. அவ்வாறு கிடைப்பினும் அவை வந்த வேகத்திலேயே திரும்பியும் விடும்.

எனவே, ஒவ்வொருவரினதும் தனித்துவத்துடன் அவர்களின் அடிமன வேண்டுதல்களின் பிரதிபலனாகப் பெறப்படுபவை அல்லது உருப்பெறுபவை நிஜமானவை. அதுவே இன்று எம் சமூகத்திற்குத் தேவை. மருட்கை வாழ்வுக்காக மண்டியிட்டுக் கொள்ளாதிருப்பதற்காக நிஜங்களில் நிதானித்துக் கொள்வது அவசியமானதாகும்.

# பிறர் ஈன நிலை கண்டு துள்ளுவார்!

டிசெம்பர் 26, 2004 சுனாமிப் பேரலை தமிழர் தாயகப் பிரதேசங்களைத் தாக்கி பல ஆயிரம் உயிர்களைப் பறித்துச் சென்றது. சொத்திழப்புக்களும் உயிரிழப்புக்களும் ஆழமான மனவடுக்களை உருவாக்கியுள்ளன.

பேரிடரினால் அல்லல்பட்டவர்களுக்குப் பொதுமக்கள், பொது அமைப்புக்கள் தன்முனைப்புடன், தன்னெழுச்சியாக தம்மால் முயன்றளவு உதவினார்கள். ஆனால். பேரிடர் வேளை செயற்படவேண்டியவர்கள் போதியளவு வேகமாகவும் அக்கறையாகவும் செயற்படவில்லையென்ற குற்றச்சாட்டு உண்டு. தமிழர் தாயகத்திற்கு வரவேண்டிய அரச உதவிகள் போதியளவு வரவில்லை. அவற்றைப் பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகளும், அழுத்தங்களும் போதியளவு மேற்கொள்ளப்படவில்லை. இழப்புக்களை உரிய முறையில் வெளிப்படுத்தி உதவிகள் வந்து சேர்வதற்கான ‘வழிகளை வெட்டவேண்டியவர்கள்’ அதனைச் செய்யவில்லை. மாறாக, பத்திரிகைகளில் தங்கள் பட்டங்களும் பெயர்களும் வரவேண்டும் என்பதற்கான செயற்பாடுகளில் அதிக நாட்டத்துடன் ஈடுபட்டிருந்தார்கள்.

நிற்க, சுனாமி அனர்த்தத்தினால் உளரீதியாக அதிகளவு மக்கள் பாதிக்கப்பட்டிருப்பது சுட்டிக்காட்டப்படுகின்றது. இதற்கான ‘பரிகார முயற்சிகள்’ பற்றிப் பலரும் பேசுகிறார்கள். உளமருத்துவர்கள், ஆற்றுப்படுத்துனர்கள் இணைந்து ‘அனர்த்த கால உளநலப் பணிக்குழு’ ஒன்றை அமைத்து வழிகளைத் திட்டமிடுகிறார்கள். உளநெருக்கீட்டிற்கு ஆட்பட்டிருப்பவர்களை நெருக்கீட்டிலிருந்து மீட்டெடுக்க அரங்க நடவடிக்கைகள் தேவை என்ற முன்மொழிவுகளும் உண்டு. சில அரங்க நிறுவனங்கள் ஆற்றுப்படுத்தல் பணியில் ஈடுபட ஆரம்பித்துள்ளன. இவ்வாறு ஈடுபடும் அரங்கத்திறன் உள்ளவர்களுக்கு உறவியல் சார் பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.



அரங்கினூடான உளசமூகச் செயற்றிட்ட வரைபுகளைத் தருமாறு பல சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் கோரியுள்ளன. அவசர அவசரமாகப் போதியளவு அரங்க அனுபவம் இல்லாதவர்களை உள்வாங்கித் திட்டங்களை எழுதிப் பணம் பெறும் முயற்சிகளில் ஒரு சில அரங்க நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன.

அவசர தேவை ஒன்றிற்காக அரங்கக் கலையைப் பயன்படுத்த முனைவது ஏற்புடைய ஒரு செயற்பாடே. இருப்பினும். இச்செயற்பாடுகள் உளவியல்துறைசார் நிபுணத்துவம் உடையவர்களின் வழிபடுத்தலுடன் மேற்கொள்ளப்படவேண்டும். அனுபவப் பகிர்வுகள், கலந்துரையாடல்கள், விவாதங்கள், உள்ளடங்கிய செயற்பாடுகளாக அவை அமைய வேண்டும். அரங்கினூடான ஆற்றுப்படுத்தல் பணியில் அரங்கு தொலைந்து போகாது இருத்தல் வேண்டும். ஆற்றுப்படுத்துனர், அரங்கத்திறன் கொண்ட ஆற்றுப்படுத்துனர், இந்த இரு நிலைகளுக்கும் இடையிலுள்ள வேறுபாடுகளைத் தெளிவாக அறிந்து புரிந்து செயற்படுதல் அவசியம்.

உளத்தைப் பாதுகாக்கும் பணி புனிதமானது. மிகப் பக்குவமாக, ஆர்ப்பாட்டமின்றி நம்பிக்கையுடன் மேற்கொள்ளப்பட வேண்டியதுமாகும். ஆற்றுப்படுத்தல் பணியில் ஈடுபடுவோர் அதன் உன்னத விழுமியங்களை பேணிப்பாதுகாத்தல் அவசியமானது. அரசியல் செல்வாக்கிற்கும் நிறுவன விளம்பரப்படுத்தலுக்கும் தனிநபர் விளம்பரப்படுத்தலுக்கும் இந்தப் பக்குவமான புனிதப் பணி பயன்படுத்தப்படுவது கண்டிப்புக்குரியது.

போர்க் காலத்தில் பிறர் ஈனநிலை கண்டு துள்ளிய அரங்கக் கலை, பிறர் ஈனத்தில் பிழைப்புத் தேடும் கலையாக மாறிவருவது வேதனைக்குரியது. இதனை, அரங்கத்துறை சார்ந்த அனைவரும் இணைந்து களைவது அவசியம்.

**- ஆசிரியர் குழு**